www.padippakam.com

கா.இராசன்



# ரஷ்யக்கரடியின் உண்மை முகம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# 1. ரஷ்யாவில் முதலாளித்துவம்

ரஷ்யாவில் முதலாளியம் என்றவுடன் புரட்சியில் நம்பிக்கையுள்ள எவருக்கும் அதிர்ச்சி ஏற்படுவது இயல்பு தான். இயங்கியல் பற்றிய சரியான தெளிவில்லாமல் அதை ஒரு நேர்க்கோட்டு ஏணிப்படி வளர்ச்சியாகப் புரிந்து கொண்டிருப்பதே இந்த அதிர்ச்சிக்குக் காரணம். சோசலிச சமூகத்திலும் வர்க்கங்களும் வர்க்க மோதல் களும் நீடிக்கின்றன என்ற மார்க்சியக் கோட்பாட்டைச் சரியாக உள்வாங்கிக் கொண்டால் இந்த அதிர்ச்சி ஏற்பட வழியில்லை.

சோவியத் யூனியனில் முதலாளியமானது அமெரிக்கா, ஜப்பான் போன்ற இதர முதலாளித்துவ நாடுகளில் உள்ளது போல் இல்லை. இத்தகைய முதலாளிய நாடு களில் பாட்டாளிகளின் உபரி உழைப்பை மூலதனத்தின் துணையுடன் ஒரு சில தனி முதலாளிகள் உறிஞ்சு கின்றனர். ஆனால் அதற்கு மாறாக, சோவியத் யூனியனில் சமூகத்தின் ஒட்டு மொத்தச் செல்வத்தையும் கட்சியின் மேல் மட்டத் தலைவர்களும் மேல்தட்டு அரசு வர்க்கத் தினருமே சுரண்டிக் கொழுக்கின்றனர்.

சோவியத் யூனியனில் முதலாளித்துவம் எவ்வாறு மீட்டெடுக்கப்பட்டது என்பது குறித்த தோழர் சுனில் பவாரின் கட்டுரை ஏற்கனவே தமிழில் வெளிவந்துள்ளது. மக்களின் பொதுவான தேவையின் அடிப்படையாகத் திட்டமிடுதல் என்கிற சோஷலிச நடைமுறையானது குருசேவ், பிரஷ்னேவ் கால கட்டத்தில் எவ்வாறு தூக்கி யெறியப்பட்டு லாபத்தின் அடிப்படையில் உற்பத்தி

படிப்பகம்

www.padippakam.com


என்கிற முதலாளித்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் முதலாளித்துவம் கட்டமைக்கப்பட்டது என்பதை அவர் விரிவாக விளக்குகிறார். மார்க்சின் மகத்தான பங்களிப் பாகிய உபரிமதிப்புக் கோட்பாட்டைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு முதலாளித்துவ மதிப்பு விதியை மீண்டும் உயர்த்திப் பிடித்து குருசேவ், கோசிகின், பிரஷ்னேவ் போன்றோர் ஆடிய ஆட்டத்தை சுனில்பவார் விரிவாக விளக்கியுள்ளார். யுத்தத்தின் பாதிப்பால் சீரழிந்து போய் பின்தங்கிய பொருளாதார நிலையிலிருந்த ரசியா வில் தோழர் லெனின் தற்காலிகமாக மேற்கொண்ட புதிய பொருளாதார கொள்கையே சோசலிச நிர்மாணத் திற்கான நிரந்தரக் கோட்பாடாக இருக்க முடியும் என்கிற அடிப்படையில் மொரோசேவ், லீபர்மேன் போன்ற திரிபுவாத மார்க்சிய லெனினிய அரசியல் வாதிகள் பொருளாதாரத்தைத் திருத்திப் புரட்டி யதையும் தோழர் பவார் அம்பலப்படுத்தியுள்ளார்.

மேற்கண்ட முதலாளித்துவ நடவடிக்கைகளுக்கெல் லாம் அடிக்கல் நாட்டுவதற்கு முதலில் ஸ்டாலின் பற்றிய அவதூறைச் செய்வது இவர்களுக்கு அவசியமாயிற்று. தோழர் ஸ்டாலின் பற்றி பிரெஷ்னேவ்வாதிகள் கீழ்கண்ட வாறு கூறினார்கள்.

> ''கட்சியினுடையவும், சோவியத் அரசனுடைய வும் பிற தலைவர்களுடன் சேர்ந்து, பெரிய ஒழுங்கமைப்பாளர் சித்தாந்த நிபுணர் என்ற முறையில் சோவியத் நாட்டில் சோவியத் அடிப் படை மாற்றங்களைச் செயல் படுத்துவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டார். **லெனினியத் தின் பகைவர்களான ''ட்ராட்ஸ்க்கியவாதிகள், வலது சந்தர்ப்பவாதிகள், பூர்ஷ்வா தேசியவாதிகள் ஆகி யோர்க்கு எதிரான போராட்டத்தை அவர் தலைமை யேற்று நடத்தினார். முதலாளித்துவ முற்றுகைச் சூழ்ச்சிகளை அவர் அம்பலப்படுத்தினார்.** சோவியத்

படிப்பகம்

www.padippakam.com



நாட்டின் தற்காப்புத் திறனை உயர்த்தப் பாடு பட்டார். உலகக் கம்யூனிச வளர்ச்சிக்கும், விடுதலை இயக்கம் அனைத்திற்கும் அவர் ஆற்றிய தொண்டு மிகப் பெரியவை. இவை எல்லாவற்றுள்ளும் **அவர் மக்களின் பெருத்த மதிப்பையும் அன்பையும் பெற்றார்.**

இப்படி ஸ்டாலினைப் பற்றி மிகவும் சரியாகச் சொல்லி விட்டு, அடுத்த பாராவிலே அவர்மீது அழுக்கு மூட்டை களை அள்ளி வீசுகிறார்கள். அதையும் கேளுங்கள்.

''ஆனால் கட்சியின் தலைமையில் சோவியத் மக்கள் அடைந்த வெற்றிகள் எல்லாம் ஸ்டாலின் பெற்ற வெற்றிகளாக நாளடைவில் சித்திரிக்கப் பட்டன. படிப்படியாக அவரது தனிநபர் வழி பாடு உருவாயிற்று. கட்சியும் சோவியத் மக்கள் அனைவரும் பெற்ற வெற்றிகளில் தனது பணி களை ஸ்டாலின் மிகையாக மதிப்பிட்டார். தாம் தவறே செய்யாதவர் என்று நம்பத் தொடங்கினார்: அவரிடம் இருந்த சொந்த இயல்புகள் இதற்குத் துணை புரிந்தன. தலைமை யின் கூட்டுத்துவத்தையும் கட்சி வாழ்வின் ஒழுங்கு முறையையும் பற்றிய லெனினுடைய கோட்பாடுகளிலிருந்து வழுவலானார். தம் வாழ்வின் இறுதிக்காலப் பகுதியில் ஸ்டாலின் செய்த தவறுகள் மிகவும் கடுமையானவை. ஜனநாயகம் தக்க காரணம் இன்றி குறுக்கப்படு வதும் சோசலிசச் சட்ட ஒழுங்கு முரட்டுத்தன மாக மீறப்படுவதும் ஆதாரமற்ற அடக்கு முறை கள் மேற்கொள்ளப்படுவதும் நிகழுமாறு விடப் பட்டன.''

*[சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சுருக்கமான வரலாறு, மாஸ்கோ-1975, பக்கம்-489]*

படிப்பகம்

www.padippakam.com



இங்கே பிரஷ்னேவிஸ்டுகள் முதல் பாராவிலே ஸ்டாலின் ஒரு சரியான மார்க்சியர்-லெனினியர் என்று சரியாகவே சொல்லிவிட்டு, அடுத்த பாராவிலே அவரை ஒரு சர்வாதிகாரியாக உருமாற்றம் செய்திருக்கிறார்கள்.

ஸ்டாலின் செய்த தவறுகள் மிகவும் கடுமையானவை என்று அவர் மீது வசைபாடும் இவர்களின் நரித்தனத்தை நாம் வாதத்திற்காக ஏற்றுக் கொள்வோம்.

அப்படி அவர் கடுமையான தவறுகளைச் செய்தபோது அவரை எதிர்த்துப் போராடாமல் எதைப் பிடுங்கிக் கொண்டிருந்தது, இந்த குருசேவ்+பிரஷ்னெவ் கும்பல்? அன்றைய நாட்களில் ஒளிந்து கொண்டு இருந்துவிட்டு அவருடைய உயிரற்ற உடலின் மீது குற்றம் சாட்டுவது தான் ஒரு புரட்சிகரக் கம்யூனிஸ்டின் நிலைபாடா? இதிலிருந்து தெரியவில்லையா இவர்கள் புரட்சியாளர்கள் அல்ல, புரட்டல் வாதிகள் என்று.

இப்படித்தான் தோழர்கள் மார்க்சும், ஏங்கெல்சும், லெனினும், ஸ்டாலினும், மாவோவும் தங்கள் எதிரிகளிடத்தில் நடந்து கொண்டார்களா?

ஸ்டாலின் காலத்தில் சில கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பது உண்மையே. ஆனால் அந்த நடவடிக்கைகளானது சோவியத் மற்றும் சர்வதேச பாட்டாளிவர்க்கத்தின் நலன்களுக்காக முதலாளிய வர்க்கத்தின் மீது அவசியத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகும். ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்வது அவசியம். ஸ்டாலினுடைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சோசலிச நிர்மாண நடவடிக்கைகள் குறித்துத் தோழர் மாவோவும் விமர்சித்துள்ளார். அந்த அடிப்படையிலானது அல்ல, இவர்கள் விமர்சனம். ஸ்டாலின் பற்றி வெறும் அவதூறுகளை மட்டுமே பேசி

படிப்பகம்

www.padippakam.com



விட்டு மேலே நாம் குறிப்பிட்ட வகையில் முதலாளித்துவ மீட்பு நடவடிக்கைகளில் இவர்கள் இறங்கினார்கள்.

இத்தகைய முதலாளித்துவ மீட்பு நடவடிக்கையின் விளைவாக ஸ்டாலினுடைய காலத்தில் உலகத்திற்கே ஓர் எடுத்துக்காட்டாய்ப் பொருளாதார வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த சோவியத் ரசியாவானது பொருளாதாரத்தில் பின் தங்கிப் போனதையும் உணவுக்காக அமெரிக்கா உட்பட்ட பிற ஏகாதிபத்திய நாடுகளிடம் கையேந்தி நிற்க நேர்ந்ததையும் உலகம் முழுமைக்கும் ராணுவ தளவாடங்களை விற்பனை செய்யும் சாவு வியாபாரிகளாக மாறிப் போனதையும் சுனில்பவார் உட்படப் பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர். சில சமீபத்திய உதாரணங்களைப் பார்ப்போம்.

> "புதுடில்லி டிச-3-ரஷ்யாவுக்கு 5 லட்சம் டன் கோதுமை விற்பனை செய்யவும், வியட்நாமுக்கு 50,000 டன் கோதுமைப் பொருட்கள் கடனாக சப்ளை செய்யவும் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்று ஐவுளி மந்திரி குர்ஜித் ஆலம்கான் இன்று ராஜ்ய சபையில் கூறினார்."

அடுத்து,

> "உணவு விவசாய ஸ்தாபனத்தின் நவம்பர் மாதத்திய சஞ்சிகையில் ரஷ்யாவின் கோதுமை உற்பத்தி 1985-ல் 8.5 கோடி டன்னாக உயரும் என்றும், 1984-ல் இதன் உற்பத்தி 7.6 கோடி டன் என்றும் 1985-86-ல் ரஷ்யா 1.7 கோடி டன் கோதுமை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் என்றும் 1984-85-ல் ருஷ்யா 2-கோடி டன் இறக்குமதி செய்தது என்றும் கூறப்பட்டுள்ளது."
>
> —4-12-'85—தினமணி,

படிப்பகம்

www.padippakam.com



சோவியத்தில் சோசலிசத் தேன் பாய்கிறது, நாங்கள் எல்லாம் நக்கிவந்தோம். எனினும், சோவியத்திற்குப் போய் வந்த அமைச்சர் ஆர். எம்.வீ-யைக் கேளுங்கள், அரங்கநாயகத்தைக் கேளுங்கள், அய்யனாரைக் கேளுங்கள் என்று கிராம நாடகத்துப் பஃபூன்களைப் போலத் துள்ளி குதிக்கும் போலிச் சிவப்புகளே இதற்கென்ன சொல்கிறீர்கள்? இன்னொரு செய்தியைப் பாருங்கள்.

> "வாசிங்டன் செப் - 13 - ஆயுத விற்பனைகளில் எந்த நாடு முதலிடம் வகிக்கிறது என்ற புள்ளி விபரங்கள் அவ்வப்போது வெளியிடப்படுவதுண்டு.
>
> "1984 ஆயுத விற்பனையில் முதலிடம் ரஷ்யாவுக்கு. அந்த ஆண்டில் 940 கோடி டாலர் [சுமார் 11280 கோடி ரூபாய்] பெருமானத்திற்கு ஆயுதங்களைப் பிற நாடுகளுக்கு ரஷ்யா விற்றிருக்கிறது.
>
> "1984 ல் அமெரிக்காவின் ஆயுத விற்பனை 770 கோடி டாலர் [ரூ. 9240 கோடி]"

இந்தத் தகவல்கள் 'ஆயுதக் கட்டுப்பாடு மற்றும் ஆயுத நீக்க ஏஜன்சீ. என்ற அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் காணப்படுகின்றன.

[நவம் - 85 - புதிய கலாச்சாரம்] 5-9-85 தினமணி

என்ன இப்படி அமெரிக்க ஏகாதிபத்தியத்தைவிட அதிகமாக ஆயுத விற்பனை செய்திருக்கிறார்களே என்றெல்லாம் கேட்டு விடாதீர்கள். அதையெல்லாம் மறைக்கத்தான் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்ச் சமாதானப் புறாவைப் பறக்க விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அடுத்து சோவியத் யூனியனில் உயர்கல்வி வாய்ப்பு எந்த அளவிற்கு எல்லோருக்கும் கிடைக்கிறது என்பதற்கு ஒரு சாம்பிள் பார்ப்போம்.

படிப்பகம்

www.padippakam.com



களைக் காட்டி பெர்ம், அட்லாய், உத்முந்தியா போன்ற பல பிராந்தியப் பண்ணைகளில் மோசடிகள் நடந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அறுவடையின் போது உற்பத்தி அளவை மிகையாகக் காட்டி அதிகாரிகளும் தொழிலாளர்களும் அதற்குரிய போனசை எடுத்துக் கொள்கின்றனர். சான்றாக 11000 ஏக்கரில் பயிரிட்டு விளைந்ததை 9000 ஏக்கரில் பயிரிட்டு விளைந்ததாகக் காட்டிப் **போனசு மோசடி செய்வது.** கட்டுமானத் தொழிலில் மட்டும் **10-லட்சம் ரூபிள்களை** அனுமதியின்றி **மோசடி செய்துள்ளனர்.** அதில் 2,07,000 ரூபிள்கள் பொறுப்பான அதிகாரிகள் சுருட்டிக்கொண்டது. **அமைச்சகத்தின் 48 பிராந்திய அலுவலகங்களில் சோதனையிட்டதில் இருவருக்கு ஒருவர்** குற்றவாளி என்று கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு காலன் பெட்ரோல் 24 டாலர் விற்கையில் அதைத் திருடி ட்ரைவர்கள் பாதி விலைக்கு வெளியில் விற்கின்றனர். இப்படி ரயில்வே, இரும்பு, இரும்பு அல்லாத தொழில்கள், கட்டுமானத் தொழில் போன்ற பல அமைச்சக மோசடிகள் வெளியாகியுள்ளன.

[ஜூலை -85- புதிய கலாச்சாரம்]

இன்னொரு செய்தியையும் பாருங்கள்.

''மாஸ்கோ ஜூலை-15. ரஷ்யாவில் ஊழலில் ஈடுபட்டதற்காகப் பல மூத்த அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதைக் கம்யூனிஸ்ட் கட்சி நாளேடான 'பிராவ்தா' கூறியது. காஜக்ஸ்தான் என்னும் இடத்தில் சுமார் 1.64 கோடி டாலர் [சுமார் 24 கோடி ரூபாய்] பெறுமான தொகையைப் பல அதிகாரிகள் கையாடினர்,

படிப்பகம்

www.padippakam.com



''மாஸ்கோ நவ -13- சோவியத் யூனியனில் உள்ள 892 - உயர் கல்வி நிலையங்களில் சேர்ந்து படிக்கும் தகுதியை 11 - லட்சம் இளைஞர்கள் பெற்றுள்ளனர். இதற்காகப் போட்டி போட்டவர்களின் தொகை இதைப்போல் இருமடங்காகும்!''

''சோவியத் அரசின் உயர் கல்வித் துறை அமைச்சர் கென்னடி யகோதின் உயர் கல்வி நிறுவனங்களிலும், குறிப்பாக மருத்துவக் கல்வி நிறுவனங்களிலும் சேர்ந்து படிப்பதற்கான போட்டி மிகவும் கடுமையானது என்றார். தானியங்கிகள், கம்ப்யூட்டர்கள், மைக்ரோ ஃபிராசசர்கள், 'தொழில் எலெக்ட்ரானிக்ஸ்'' ரேடியோ பொறியியல் முதலிய துறைகள் அதிக மாணவர்களைக் கவர்ந்திழுக்கின்றன. இதே போல ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலும் அதிகம்பேர் சேர விரும்புகின்றனர். நாடகக் கலை, சினிமாக் கலை மற்ற கலைகள் முதலியவற்றில் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களில் சேருவதற்குப் போட்டி கடுமையாக உள்ளது''

[தினமணி 15.11.85]

போட்டியில் தோல்வியடைந்தவர்கள் எல்லாம் என்ன செய்வது? சோயூஸ் விண்கலங்களில் ஏறி விண்வெளி நோக்கிப் பறந்து போவார்களோ?

சரி! இதெல்லாம் கிடக்கிறது. இனிவரும் சாதனைப்யைப் பாருங்கள். கீழே உள்ளது **இஸ்வெஸ்திகா** பத்திரிகையில் வெளிவந்த ஒரு செய்தி.

''ருஷ்யப் பொருளாதாரம் பெருமளவு மோசடிகளுக்கு இடமளிக்கக் கூடியதாக உள்ளது, விவசாயத் துறையில் பொய்யான புள்ளி விவரங்

படிப்பகம்

www.padippakam.com



தொழிற்சாலை. விவசாயம், கட்டிட நிர்மாணம் ஆகிய துறைகளில் இத்தகைய கையாடல் நடந்துள்ளதாக 'பிராவ்தா' கூறியது.

பல முறைகேடுகளுக்காகக் கட்சியின் சிம்கென்ட் கிளையின் தலைவர் அசன்பே அஸ்கர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

நாடு முழுவதும், பொருளாதாரத்திற்கு உத்வேகம் அளிக்கவும் கட்சியில் கட்டுப்பாட்டை நிலை நாட்டவும், கோர்பசேவ் எடுக்கும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியே இந்த நடவடிக்கை.

பொருளாதார இலக்கைக் காட்டுவதற்காகப் பொய் தஸ்தாவேஜுகள் தயாரித்தல், வேண்டியவர்களுக்குச் சலுகை அளித்தல், அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தல், அரசாங்க நிதிகளையும் சரக்குகளையும் திருடுதல் முதலிய குற்றங்கள் நடந்ததாகப் பத்திரிக்கை கூறியது. **மக்கள் எவ்வளவோ முறைகள் புகார்கள் கூறியும் கட்சியின் தலைவர்கள் செவிமடுக்கவில்லை.**

உஸ்பெக்கின் தலைநகரான தாஸ்கண்டிலிருந்து 160 கிலோ மீட்டர் தூரத்தில் சிம்கென்ட் உள்ளது. 1970 முதல் இங்கு ஊழல் பரவலாக உள்ளதாகத் தெரிகிறது. சில ஆண்டுகளுக்கு முன்னரே கட்சித் தலைவர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டதையும் பிராவ்தா சுட்டிக் காட்டியது. ஆனால் இதற்குப் பின்னரும் ஒரு மிருகக் காட்சி சாலை முதலிய வற்றைக் காரணம் காட்டி ரூ. 12 கோடி கையாடப்பட்டது. ஆனால் அடிப்படைத் தேவைகளான ஆஸ்பத்திரி, வீடுகள் முதலியன கட்டப்பட வில்லை,

படிப்பகம்

www.padippakam.com



ஊழல் பற்றி நீண்ட விசாரணை நடத்தப்பட்ட தாகக் கூறிய பிராவ்தா ஏன் இவ்வளவு காலம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைக் கூற வில்லை. 1982-ம் ஆண்டில் யூரி ஆந்திரபோவ் கட்சித் தலைவரானவுடன் **ஊழல் ஒழிப்பு இயக்கம்** துவக்கினார். ஆனால் அப்போதும் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.''

[17-7-85 - தினமணி]

இதுதான் சோஷலிசக் கலாச்சாரத்தின் லட்சணம். சுமார் எழுப்து ஆண்டுக் கால சோஷலிச நிர்மாணம் உருப்படி யாய் அமைந்திருந்தால் இத்தகைய ஊழல்கள் அங்கே ஏற் பட்டிருக்குமா என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இந்த குருசேவ் பிரஷ்னேவ் அவர்களின் இந்நாளைய வாரிசு கூறுவதைக் கேட்போம்.

''எழுபதுகளின் தொடக்கத்திலிருந்து நாட்டுப் பொருளாதாரத்தில் சங்கடங்கள் எழுந்தன. பொருளாதார வளர்ச்சிக்கான நிர்வாக முறை கள் பொருளாதார நடவடிக்கை இயல்புகளில் விடாமுயற்சி இல்லை. அவசியமானால் எல்லா கட்டுமான பணிகளையும் மறு பரிசீலனை செய்ய வேண்டும்.''

[ரஷ்யப் பொருளாதாரம் பற்றிய மத்திய கமிட்டி மாநாட்டிற்குக் கோர்பசேவ் தாக்கல் செய்த அறிக்கை தினமணி 12-6-85]

எழுபதுகளிலிருந்து பொருளாதாரம் சீரழியத் தொடங்கி விட்டதாம். இது கோர்பசேவின் வாக்குமூலம். பொருளாதாரத்தை வளர்க்க விடாமுயற்சி இல்லையாம். எல்லா கட்டுமானப் பணிகளையும் பரிசீலிக்க வேண்டு மாம். இதுவரை தேங்கிக் கிடக்கும் பழைய தொழில்

படிப்பகம்

www.padippakam.com



நுட்பத்திற்குப் பதிலாக புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டுமாம். ஆகா... தோழர் கோர்பசேவ் புரட்சிமேல் புரட்சியாக அடுக்குகிறாரே என்று மகிழ்ந்து விடாதீர்கள். அடுத்த பாராவிலேயே அவர் சொல்கிறார்:

> ''பொருட்களின் தரத்தை உயர்த்துவதற்கு நுகர்வோர் கிராக்கி உட்பட சந்தைப் பொருளாதார சக்திகளுக்கு அதிகம் முக்கியத்துவம் தர வேண்டும்''.

[அதே அறிக்கை]

கோர்பசேவ் அதற்கு மேலும் போகிறார்.

> ''திறமை, கட்டுப்பாடு, தொழில் நுட்ப அறிவாற்றல், ஆகியவற்றை விரிவாகப் பயன்படுத்துவதன் மூலம் பொருளாதாரத் துறையில் ரஷ்யா சிறப்பான சாதனை புரியவேண்டும் என்று கோர்பசேவ் தொடர்ந்து வலியுறுத்தினார்''

[தினமணி-27-10-85]

இப்போது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. அதாவது மொரோசேவ், லீஃபர்மேன், கோசிகின் ஆகியோரின் வாரிசுதான் கோர்பசேவ். ஆதாயம், போனஸ், வட்டி, சந்தைக்கான உற்பத்தி, தனி நபர்களின் அறிவாற்றலை முன்னிறுத்தி மக்கள் சக்தியைப் பின்னுக்குத் தள்ளுதல் ஆகிய, சோசலிசத்திற்கு எள்ளளவும் பொருந்தாத நடவடிக்கைகளே இவர்களின் சாராம்சமாகும். இவை அனைத்தும் முதலாளித்துவத்திற்கே உரித்தானவையாகும் என்பதை விளக்கத் தேவையில்லை.

படிப்பகம்

www.padippakam.com

# 2. சோவியத் ஏகாதிபத்தியத்தின் வாணிபக் கொள்ளை

பிரஷ்னெவ் வாதிகளின் அயல் நாட்டு வர்த்தக மானது முழுக்க முழுக்க ஓர் ஏகாதிபத்தியக் கொள்ளை யாகவே நடைபெறுகிறது. அதிலும் குறிப்பாக 3-வது உலக நாடுகளிடம் அவர்கள் அடிக்கும் கொள்ளையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். இனிநாம் அவர்களுடைய வாணிப சோசலிசத்தைப் பார்ப்போம். இங்கே நாம் பார்க்கப்போவது ஒரு சில துளிகளே. நமக்குத் தெரியா மல் கடலளவு இருக்கிறது.

1. 60-ஆம் ஆண்டுகளின் மத்தியில் மாஸ்கோவிடமிருந்து பெற்ற ஆயுதக் கடனை அடைக்க தோல், கம்பளி, புண்ணாக்கு, முதலான பொருட்களை உலக மார்க்-கெட்டின் விலையைக் காட்டிலும் 3 மடங்கு குறைந்த விலைக்கு இந்தியா ரஷ்யாவிற்கு அள்ளிக் கொட்டியது.

2. 1967-ல் மாஸ்கோவிடமிருந்து இந்தியா வாங்கிய மிக்-21 போர் விமானத்தின் விலை 77 லட்சம். அதை அவர்கள் துணையுடன் இந்தியாவில் தயாரிக்கும் போது 1-27 கோடியாக இருந்தது.

3. அறுபதுகளில் எண்ணெயின் உலக மார்க்கெட் விலையைக் காட்டிலும் டன்னுக்கு ரூபாய் 11 கூடுதலாக வைத்து இந்தியாவின் தலையில் கட்டினார்கள் பிரஷ்னெவ் வாதிகள்,

படிப்பகம்

www.padippakam.com



4. 1971-72-ல் டன்னுக்கு 1848-2261 ரூபிள்கள் என்ற விலையில் புகையிலை ஏற்றுமதி செய்தது ரசியா. அதே காலத்தில் இந்தியாவிடமிருந்து அதே தரமுள்ள புகையிலையை 945-1001 ரூபிள்கள் என்ற விலைக்கு இறக்குமதி செய்து, நம்மைக் கொள்ளையடித்தது.

5. எழுபதுகளின் மத்தியில் இந்தியாவின் தேயிலை ஏற்றுமதியானது 80% தன்னைச் சார்ந்திருக்கும்படி செய்து கொண்டார்கள் பிரெஷ்னெவ்வாதிகள். அப்பொழுது திடீரெனத் தேயிலைத் தொடர்பாகத் தாங்கள் செய்துகொண்ட ஒப்பநதங்களை மறுத்து விட்டு இந்தியாவின் தேயிலைத் தொழிலுக்குப் பெரிய நஷ்டத்தை உண்டாக்கி, பின்பு உலக மார்க்கெட் விலையைவிடக் குறைந்த விலைக்கு இந்தியத் தேயிலையை அள்ளிக் கொண்டு போனது பிரஷ்னெவ் கும்பல்.

6. 1972-73-74ஆம் ஆண்டுகளில் மாஸ்கோ இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்த இரும்புக்குக் கொடுத்த விலை டன்னுக்கு 36.6—30.5 ரூபிள்கள். இதே காலத்தில் பாகிஸ்தானுக்கு 56.1—51.4—69.1 ரூபிள்கள் என்ற விலையில் ஏற்றுமதி செய்தது.

7. 1973-ல் அரபு நாடுகள் மேற்கு நாடுகளுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதித்தன. ரஷ்யா அரபு நாடுகளின் மாபெரும் நண்பன் என்று தன்னைக் காட்டிக் கொண்டு, அரேபியாவிலிருந்து எண்ணெய் வாங்கி மீண்டும் அதை மேற்கு நாடுகளுக்கு (ரகசியமாக) மறு ஏற்றுமதி செய்து பல்லாயிரம் கோடி ரூபாய் கொள்ளையடித்தது

8. சோவியத் யூனியன் இந்தியாவிற்கு 'உதவி' என்பதன் பேரில் உலகச் சந்தைகளில் இருக்கும் விலையை விட, பொருள்களை எல்லாம் 20-லிருந்து 30% வரை, சில சமயங்களில் 200% வரை அதிக விலைக்கு விற்றுக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டிருக்கிறது. மறுபுறத்தில் 20 முதல் 30% வரை குறைவான விலைக்குத்தான் அது இந்தியாவிட மிருந்து பண்டங்களை வாங்குகிறது என்று ஒரு செய்தி.

9. 1973-74-ல் எகிப்திலிருந்து இரும்புத் தகடுகளை டன்னுக்கு 109, 135 ரூபிள்கள் கொடுத்து வாங்கி சிரியா, இந்தியா, ஈரான் முதலிய நாடுகளுக்கு 157, 171 ரூபிள்களுக்கு விற்றது.

10. 1978-ஆம் ஆண்டு பிரஷ்னெவ் வாதிகள் 10,000 ரயில் வாகனங்களை வாங்க இந்தியாவிடம் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இந்த வாகனங்கள் ரஷ்யா மட்டுமே பயன்படுத்தக் கூடிய வகையில் தயாரிக்கப் பட்டன. ஆனால் பாதிக்கு மேற்பட்ட வாகனங்கள் இங்கு உற்பத்தியானவுடன் தாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறினார்கள். விளைவு ஒப்பந்த விலையை விட, குறைந்த விலைக்குக் தேயிலையைப் போல் இந்தியா ரஷ்யாவுக்குக் கொட்டிக்கொடுத்தது.

11. எண்பதுகளின் தொடக்கத்தில் மாஸ்கோவின் கூட்டுடன் சென்னையில் தொடங்கப்பட்ட அறுவை, மருந்து மற்றும் கருவிகள் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை இந்திய அரசின் அனுமதி இல்லாமலே 3-வது உலக நாடு களுக்கு ஏற்றுமதி செய்தது, பிரஷ்னெவ் கும்பல்.

12. 1982-83-ல் குருட் ஆயிலை இறக்குமதி செய்ய ருஷ்யா வுக்கு இந்தியா கொடுத்த விலை உலகச் சந்தை விலையை காட்டிலும் 20% அதிகமாக இருந்தது.

மேற்கண்ட புள்ளி விபரங்கள் அனைத்தும் ஏற்கெனவே தமிழில் வந்த கீழ்க்கண்ட கட்டுரைகளிலிருந்து எடுக்கப் பட்டவை.

படிப்பகம்

www.padippakam.com



> "சமத்துவமின்மை வளர்ச்சிக்கு உதவுகிறது என்று தீர்மானம் நிறைவேற்றியது டெங் கூட்டம்."
>
> [தினமணி—5-12-84]

ஆகா, எப்பேர்பட்ட சோஷலிசப் புரட்சி!

இப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்தும் முதலாளியத்திற்கு முந்தானை விரித்தது டெங் கும்பல்!

இப்படிச் சீழ்பிடித்து வழியும் டெங் கூட்டத்தைப் பார்த்து, 'தோழர்களே, உங்களுடைய இந்நடவடிக்கை கள் சீனாவிற்குப் பெரிய சிரமங்களை உண்டுபண்ணும்,' என்று செல்லமாகக் கிள்ளிவிட்டுக் கூடிக் குலாவத் தொடங்கிவிட்டது பிரஷ்னெவ் கூட்டம்.

தீர்மானம் போட்ட சீனக்கட்சி, குரங்குத்தனமாக மேலும் ஒரு தாவுத்தாவி,

> "மார்க்சின் சில கருத்துக்கள் இப்போதைய கால கட்டத்திற்கு ஏற்றவை அல்ல; இப்போதைய நவீன காலத்தின் நிலைமைகள் பற்றி மார்க்சுக்கோ அல்லது பிரட்ரிக் எங்கெல்சுக்கோ அல்லது லெனினுக்கோ தெரியாது."
>
> [தினமணி—12-12-84 & சமரன்]

என்று மக்கள் தினசரியில் எழுதியதின் மூலம், தங்களை சர்வதேச முட்டாள்களின் வரிசையில் முதல் இடத்தில் நிறுத்திக் கொண்டது. ஏகாதிபத்தியங்கள் அள்ளி யிறைக்கும் சோற்றுப்பருக்கைகளைத் தின்பதிலே



படிப்பகம்

www.padippakam.com



சொர்க்கம் காணும் 'சோ' ராமசாமி தன்னுடைய 1-1-85 'துக்ளக்'கில்

> ''சீன அரசின் விமானக் கம்பெனி மூன்றாகப் பிரிக்கப்பட்டு மூன்று தனியார் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்படுகிறது. போட்டி மனப்பான்மை யில் நல்ல விதமாக மக்களுக்குப் பயன்படவே இந்த ஏற்பாடு.''

என்று எக்காள மிடுகிறானே! சீனாவின் நிலை புரிகிறதா?

இப்படிச் சீரழிந்து கொண்டிருக்கும் சீனாவிற்கு 21-12-84 அன்று சென்ற மாஸ்கோ பிரதமர் 'இவானவிச் ஆக்கிபோவ்' முழங்குகிறான்:

> ''சீன சோவியத் உறவில் ஆக்கபூர்வமான வளர்ச்சி நிலை தோன்றியுள்ளது.
>
> ''இந் நாடுகளிடையே உள்ள உறவு நிலையில் நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் தமது விஜயம் அமைந்துள்ளதாக சோவியத் கருது கிறது''

[தினமணி—22-12-84]

என்று. அடுத்ததாக, பீகிங் கும்பல் மாஸ்கோவிற்கு ஓடியது.

> ''மாஸ்கோ டிசம்பர்-23 1985-ரஷ்யத் தலைவர் மிகையீல் கோர்பசேவ் இன்று ருஷ்ய விஜயம் செய்த சீனத் துணைப் பிரதமர் 'லீ-பெங்குடன்' பல் பிரச்சனைகள் பற்றி விவாதித்தார்.''

[தினமணி—26-12-85]

www.padippakam.com



பத்திய நுகத்தடியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தாகும். அடுத்து இவ்வொப்பந்தமானது இரு நாடுகளின் நலன்களையும் பாதிக்காமல் பய னுள்ள வழியில் அமைந்துள்ளது என்பது வெளிப் படை.''

ஸ்டாலின் காலத்தில் அயலுறவுக் கொள்கையானது நேர்மையாக இருந்தது. யாரையும் அச்சுறுத்தக் கூடிய தாகவோ. நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது கட்டளை பிறப்பிக்கக கூடியதாகவோ இல்லை. ஆனால்...பிரெஷ்னெவ் வாதிகள் காலத்திலிருந்து மேற் கண்ட பண்புகள் கடைப்பிடிக்கப்பட்டனவா என்றால் இல்லை. சுரண்டல், மிரட்டல், நிர்பந்தம் ஆகியன அயலுறவுக் கொள்கையாய் ஆகிப்போனது பிரஷ்னேவ் வாதிகளுக்கு. அதன் கோர முகங்களைப் பாருங்கள்.

''பாரத மின் நிலையத்திற்குத் தேவையான கருவி களோடு கூடவே இரண்டு 'டர்போ ஜெட்'-களை வாங்கினால்தான் மற்ற உயிராதாரமான சாதனங்களையும் விற்க முடியும் என்று இந்தியாவை நிர்ப்பந்தித்தது பிரஷ்னெவ் கும்பல்''

[கரடியின் பிடி இறுகுகிறது]

இந்தியா போன்ற அரைக்காலனிய அரை நிலப்பிர புத்துவ நாடுகள் தொழில் துறையை அபிவிருத்தி செய்ய ரஷ்யாவிடம் உதவி கோரினால், பிரெஷ்னெவ்வாதிகள் என்ன செய்திருக்க வேண்டும்—மூன்றாம் உலக நாடுகள் தொழிற் துறையில் சுயமாய் நிற்க உதவி செய்திருக்க வேண்டும். ஆனால் என்ன செய்தார்கள்-'நிபந்தனை' என்கிற பெயரில் சுயமாகத் தொழிற்துறை வளரவிடாமல் மூன்றாம் உலக நாடுகளின் குரல்வளையை நெரித்-

ர. உ.—2

படிப்பகம்

www.padippakam.com


த்தார்கள், நெரிக்கிறார்கள். அதற்கு வலது, இடது திரிபுவாதிகள் வழக்கமாக ஒத்து ஊதுகிறார்கள். இதுதான் சோசலிச அயலுறவுக் கொள்கையா?

மேலும் இந்திரா கும்பலின் எடுபிடியும், ரப்பர் ஸ்டாம்புமான வெங்கட்ராமன் கூவுகிறார் கேளுங்கள்:

> "கனரகத் தொழில்களை நிர்மாணிப்பதால் மட்டுமே நாடு தொழில் மயம் ஆகிவிடாது. வெளிநாட்டு உதவி கிடைப்பதால் கனரகத் தொழில்கள் கார்ப்பரேசன் போன்ற தொழிற்கூடங்கள் நிர்மாணிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது."

[தினமணி—16-4-85]

இந்தியக் கனரகத் தொழில்துறையானது பெரும்பாலும் பொதுத்துறை நிறுவனங்கள் என்பதும் இதில்தான் பிரஷ்னெவ்வாதிகள் அதிக ஈடுபாடு கொண்டுள்ளார்கள் என்பதும் வெளிப்படையான ஒன்று. இதைத்தான் வெங்கட்ராமன் மறைமுகமாகக் குறிப்பிடுகிறார் என்பதும் உண்மையே. மாஸ்கோவாதிகள் இந்திய சோஷலிசச் சிற்பிகளுடன் வாணிபம் செய்கிறார்கள் பாருங்கள். இதோ இந்திய சோஷலிஷ்டான அன்றைய உணவு மந்திரி ராவ் வீரேந்திர சிங் 24-4-84 அன்று உதிர்த்த வாக்குமூலம்:

> "முதலில் வந்தவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் தனியார் வர்த்தகர்களும் ரஷ்யாவுக்கு 10-லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்தார்கள்."

[தினமணி—25-4-84]

முதலாளிய சக்திகளை இந்தியாவில் ஊக்குவிக்கின்ற இப்படிப்பட்ட மோசடிகளையெல்லாம் சிவப்புக் கொடி

படிப்பகம்

www.padippakam.com



யில் மறைத்துவிட்டுத்தான், இந்திய ஓட்டுப்பெட்டிச் சிவப்புகள் இந்தியாவில் பொதுத்துறை வளரவேண்டும். அது சோஷலிசத்திற்கான வழித்தடம். பொதுத் துறைக்குத்தான் எங்கள் எஜமானர்களான மாஸ்கோ வாதிகள் உதவிசெய்கிறார்கள் என்று மார் தட்டு கிறார்கள்.

இப்படிப்பட்ட 'சிவப்பு மோசடிகளைத்தான்' குண்டும், துப்பாக்கியும் ஏந்தித் திரியும் நக்சல்பாரிகள் எதிர்க்கிறார்கள் என இந்திய வலது இடதுகள் ஓலமிடு கிறார்கள், ஒப்பாரி வைக்கிறார்கள். இந்தியாவின் விடுதலைக்குத் தடையாக நிற்கும் அமெரிக்க ரஷ்ய ஏகாதி பத்தியங்களை எதிர்ப்பதில் அளப்பரிய தியாகம் செய்துள்ள நக்சல்பாரிகளைத் திரிபுவாதிகள் எதிர்ப்பது கூடக் காரணம் இல்லாமல் இல்லை.

சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பிரதாப்சிங் பேசும்போது உதிர்த் தவை:

> ''தனியார் துறை முன்னேற்றத்திற்கும், வளர்ச் சிக்கும் பொதுத் துறையைச் சார்ந்துள்ளது. இரண்டும் ஒன்றையொன்று சார்ந்திருக்கும் தொழில்கள்.''

[தினமணி 7-5-85]

மந்திரியின் வாக்குமூலத்திலிருந்து இந்திரா கும்பலின் பொதுத் துறையானது, தனியார் அதாவது முதலாளி யத்தின் வாழ்வுக்குத்தான் என்ற உண்மை நிர்வாணமாக நிற்கவில்லையா?

இப்படித் தன்னுடைய தரகுக் கூட்டத்திற்கு பிரஷ்னெவ் கும்பல் செய்கின்ற உதவியைத்தான் ஏகாதி பத்திய ஊடுருவலைத்தான் போலிச் சிவப்புகள் தேச விடுதலை என்ற போர்வையில் மறைக்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



ரசியத் துணை] சனாதிபதி டி.எச். கோஷோவ் பிரகடனம் செய்வதைக் கேளுங்கள்:

''பரிதாபாத் ஆக-17. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கையை ராஜீவ் காந்தி அரசு சமீபத்தில் தளர்த்தி இருப்பதால் இந்திய ரஷ்ய நட்புறவு பாதிக்கப் படாது.''

கோஷோவ் மேலும் கக்குகிறார்:

''குறிப்பிட்ட பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்ற வேண்டிய கட்டாயம் ஒவ்வொரு நாட்டுக்கும் உண்டு. குறிப்பிட்ட ஒரு கொள்கையைப் பின்பற்றினால் தனது பிரச்சினைகள், சிரமங்கள் தீர்க்கப்படும் என இந்தியா கருதினால் அந்தக் கொள்கையை அது பின்பற்றுவதில் தவறு ஏதும் கிடையாதென்றார்.''

''ராஜீவ் காந்தியை அவரது உறுதிக்காகவும் ஆக்கபூர்வக் கொள்கைகளுக்காகவும் ரஷ்ய மக்கள் மதிக்கின்றனர்.''

''மேலும், கூட்டுச்சேரா இயக்கத்தின் தலைவராக இருப்பதும் ராஜீவின் மதிப்பை மேலும் உயர்த்தியுள்ளது என்றார் கோர்பசேவ்.''

[தினமணி—19-8-85]

என்னடா இது கோஷோவ் கோசா மாதிரி பேசுகிறாரே! என்று சிரித்துவிடாதீர்கள். அவர் புத்திசாலித்தனமாகத் தான் பேசுகிறார்.

'இந்தியாவின் பொருளாதாரக் கொள்கையை ராஜீவ் காந்தி அரசு தளர்த்தியிருப்பதால், அதாவது அமெரிக்கா உள்ளிட்ட அனைத்து ஏகாதிபத்தியங்களும் மேலும்

படிப்பகம்

www.padippakam.com



மேலும சுதந்திரமாக இந்த தேசத்தைக் கொள்ளை யடிக்கப் பாசிச இந்திரா ராஜீவ் கும்பல் துணை போவதால் இந்திய ரஷ்ய நட்புறவு பாதிக்கப்படாதாம். அதாவது இந்தியா என்ற இடைத்தரகன் மூலம் ஏகாதி பத்திய வாதிகளும் மாஸ்கோவாதிகளும் கைகோர்த்துக் கொள்ளையடிப்பார்கள். அதற்கான சமரசமே கோஷோா வின் இந்த வார்த்தை ஜாலம்.

மேற்கண்ட எல்லாவற்றையும் விட கோஷோவ் தனி வாழ்வில் செய்திருக்கும் மிகப்பெரிய திருப்பணி ராஜீவ் காந்தியை அவரது உறுதிக்காகவும் ஆக்கபூர்வக் கொள்கை களுக்காகவும் ரஷ்ய மக்கள் மதிக்கின்றனர் என்று பஜனை பாடியிருப்பதுதான். அதுமட்டுமா?

பிரஷ்னெவ் கும்பலின் சோஷலிச மற்றும் கம்யூனிசப் புரட்சியைப் பார்த்துவிட்டு பிரமித்து நிற்கும் புரட்சிகரத் திரிபுவாதிகளே துவண்டுவிடாதீர்கள். உங்களுடைய சோர்வைப் போக்குவதற்காக பிரபல 'பிடோவ் ராவ்ணோவ்' வருகிறார்.

> "12-11-84 அன்று டெல்லியில் நடைபெற்ற இந்திய வர்த்தகத் தொழில்கள் சபையின் 5-வது மாநாட்டில் கலந்துகொள்ளத் தூதுக் குழு ஒன்று ரசியாவிலிருந்து வந்தது. அதன் தலைவராக Y.B. பிரோவ் ராவ்ணோவ் பொறுப்பேற்றிருந் தார். இக்குழுவின் இளைய தலைவரான ராம கிருஷ்ணபஜாஜ் வரவேற்றார். பொறியியல் மற்றும் ஏனைய துறைகளில் பரஸ்பர ஒத்துழைப் பைப் பெருக்குவதற்காக இக்குழு பெருந்தொழில் அதிபர்களையும் சந்தித்துப் பேசும் என்று எதிர் பார்க்கப்படுகிறதாம்."
>
> [தினமணி—13-11-84]

படிப்பகம்

www.padippakam.com



பிடோவ் ராவ்ணோவ் வாக்குமூலத்தை மேலும் கேளுங்கள்.

''மாஸ்கோ செப் 21- இந்தியாவிலுள்ள தனியார் துறையினருக்கு உயர் தொழில் நுட்ப உதவி அளிக்க சோவியத்யூனியன் முன்வந்துள்ளது.''

''இது இந்தியத் தனியார் துறையினர்-சோவியத் உறவில் பெரும் மாறுதலாகக் கருதப்படுகிறது'' ''சிமெண்ட், ரசாயனப் பொருட்கள் ஆலைகள், எண்ணெய் ஆய்வுத் திட்டங்கள், உருக்குப் பொருட்கள் தயாரிப்பு ஆலை ஆகியவற்றிற்கு சோவியத் உயர் தொழில் நுட்பத்தை இங்குள்ள தனியார் துறையினருக்கு அளித்து உதவ முன் வந்துள்ளது.''

''மாஸ்கோவில் இந்திய வர்த்தகத் தொழில் சபைகளின் இளைய தலைவர் டி.என். பட்டோடியா, சோவியத் வர்த்தக சபை, பொருளாதார ஒத்துழைப்புக் குழு மற்றும் பிற அமைப்புகளுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் மூலம் சோவியத்தின் தொழில் நுட்ப உதவிக்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது. இது சம்பந்தமாகத் தொழில் கூட்டுக்கு அடிகோலும் உடன்பாட்டில் இருதரப்பினரும் கையெழுத்திட்டனர்.''

''டி. என். பட்டோடியா தலைமையிலான இந்தியக் குழுவானது சோவியத் துணைப் பிரதமர் இவான் ஆர்கிபோவுடனும் சந்தித்து பேச்சு நடத்தியது''

[தினமணி—23-9-85]

''சிம்லா நவம்-17. இந்தியாவிலுள்ள தனியார் கம்பெனிகளுடன் வணிக உறவு கொள்ள ரசியா முன்வந்துள்ளது என்று இந்திய வர்த்தக சபை

படிப்பகம்

www.padippakam.com



சம்மேளனத் தலைவர் டி. என். பட்டோடியா இன்று நிருபர்களிடம் கூறினார். சமீபத்தில் அவர் ரசியா சென்று திரும்பியிருந்தார்.'' ''இந்திய தனியார் துறையுடன் கூட்டாக 3-ஆம் உலக நாடுகளில் தொழில்களைத் துவங்க ரசியா முன் வந்துள்ளது என்று கூறினார்.''

[தினமணி—19-11-85]

லெனினும் ஸ்டாலினும் காட்டிய வழியில்தான் சோவியத்தின் அயல்துறைக் கொள்கை இருக்கிறது என்று போலி சிவப்பு கிழட்டுநரிகள் புளுகுகிறதே இந்த வகைப்பட்ட அயலுறவுக் கொள்கையைத்தான் லெனின், ஸ்டாலின் அமைத்துக் கொடுத்தார்களா?

முதலாளியம் ஒழிக என முழங்கிக் கொண்டே முதலாளியங்களுடன் கூட்டு வைத்துக்கொள்ளச் சொன்னாரா லெனின்? உலக சமாதானம் ஓங்குக என்று வெண் புறாக்களை பறக்கவிட்டுக் கொண்டே ஆயுத வியாபாரத்தில் ரசியாவை முதலிடத்தில் நிற்கச் சொன்னாரா ஸ்டாலின்?

திரிபுவாத இயக்கங்களில் தெரிந்தோ தெரியாமலோ செயல்படும் இளைஞர்கள் மேற்கண்ட கேள்விக் கணைகளை உங்கள் தலைமையிடம் விடுக்க வேண்டும். நேர்மையான, சத்தியமான கொள்கைக்காகப் போராடுவது நம் கடமை அல்லவா?

ரசியாவைக் களங்கப்படுத்தவேண்டும் என்றா புரட்சியாளர்கள் போராடுகிறார்கள்? அதற்காக ஏன் அவர்களை இந்திய அரசும், ஏகாதிபத்தியங்களும் சுட வேண்டும்? நக்சல்பரியில், பீகாரில், ஆந்திராவில், தர்மபுரியில் எத்தனை புரட்சியாளர்களை ரகசியக் குண்டுகள் துப்பாக்கிகள் கொன்று குவித்திருக்கும்? சிந்தியுங்கள்,

படிப்பகம்

www.padippakam.com



ரசிய ஏகாதிபத்தியம் சோஷலிசம், சகோதரத்துவம், சர்வதேசியம், சமாதானம் என்பதை ஓதிக்கொண்டே, இந்தக் கொலைக் கூட்டம் ஏகாதிபத்தியம் என்ற கேடயத்தை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, மற்றொரு கையில் சோசலிச வாளை ஏந்தி இந்தியா மற்றும் மூன்றாம் உலக நாட்டுப் பொருளாதார வளங்களைத் தின்னும் கழுகுகளாகப் பவனி வருகிறார்கள் என்பது உண்மை இல்லையா?

'முதலாளியச் சமூகத்தில் பொதுத்துறை என்பது சுரண்டலின் மாற்று வடிவமே' என்ற மார்க்சியக் கோட்பாட்டை மறுதலித்துவிட்டுப் போன வலது இடது போலிகள் கோர்பசேவ் கும்பலின் எடுபிடிகளாக இருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

பிரஷ்னெவ் வாதிகள் மற்ற நாடுகளுடன் செய்து கொள்ளும் தொழிற்கட்டமைப்பு மற்றும் அனைத்துத் துறைகளிலும் தங்களுடைய ஆதிக்கம் ஓங்கியிருக்கும்படி பார்த்துக்கொள்வதுடன், கூடவே மோசமான தொழில் நுட்பத்தையே வளர்ந்துவரும் நாடுகளின் தலையில் கட்டுதல்முதலான போக்கையே கடைப்பிடிக்கின்றனர்.

ருஷ்ய உதவியுடன் இந்தியாவில் கட்டப்பட்ட உருக்காலைகளில்,

> ''ஆயிரத்திற்கும் மேற்பட்ட ருஷ்யர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் பிரஷ்னெவ் வாதிகளின் தலைமை பீடமான K. G. B-யால் பயிற்றுவிக்கப பட்டவர்கள் ஆவார்''
>
> [கரடியின் பிடி]

அதே போன்று, தோழர் ஸ்டாலின் மறைவிற்கு பிறகு ரசியாவில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியவர்களில்

படிப்பகம்

www.padippakam.com



பெரும்பான்மையோர் K. G. B-யின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்களாவர் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

சமீபத்தில் மாஸ்கோ சென்று வந்த ராஜீவ் இந்தியாவில் அணுமின் நிலையம் அமைக்க மாஸ்கோவாதிகள் திட்டமிட்டிருப்பது பற்றி வாக்குமூலம் கொடுப்பதைக் கேட்போம்.

> ''அதில் சிக்கல்களும் பிரச்சனைகளும் நிறைந்துள்ளன. அதன் கண்காணிப்பு, அமைப்பு, ரசிய சட்டம் போன்றவற்றில் சிக்கல்கள் உள்ளன.
>
> ''இந்தியாவில் அமைக்கப்படும் அணுமின் நிலையங்களுக்கு ரசியப் பாதுகாப்புக் கண்காணிப்பு ஆய்வு போன்றவற்றை இந்தியா விரும்பவில்லை. இதுபற்றி விவாதிக்கப்பட்டு வருகிறது.''

[தினமணி - 27. 5. 85]

ராஜீவ் இப்படிப் புலம்புவதிலிருந்து கோர்பசேவ் கும்பல் ஆதிக்கத்தை திணிக்கிறதே ஒழிய சகோதரத்துவத்தை அல்ல என்பது சொல்லாமல் விளங்கவில்லையா?

இந்தப் பிரபஞ்சத்தில் உலாவரும் புவிக்கோளை அணுகுண்டு நாசத்திலிருந்து பாதுகாக்கவே எங்கள் எசமான்கள் நிர்ப்பந்திக்கிறார்கள் என சிவப்பு லும்பன்கள் மார்தட்டிக்கொள்கிறார்களே அதன் நோக்கம் என்ன?

70-களின் தொடக்கத்திலிருந்தே பாசிச இந்திரா கும்பல் அணுகுண்டு தயாரிப்பிலும், அணு ஆயுதத் தயாரிப்பிலும் முனைப்புடன் இருந்து வந்திருக்கிறது. நிலைமை இப்படி இருக்கையில் 'தேசப் பாதுகாப்பு' ஏன்கிற பிரச்சாரம் செய்வது என்பது நம்மை முட்டாளாக்கும் செயல் அல்லவா? மேலும்...

படிப்பகம்

www.padippakam.com



''ஆந்திர மாநிலத்தில் உள்ள விசாகப் பட்டினத்தில் மாஸ்கோவின் கூட்டுடன் ஓர் அலுமினியத் தொழிற்சாலை கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது.''

இது பற்றி அந்தத் தொழிற்சாலை அதிகாரி கூறுகிறார் கேட்போம்.

''விசாகப்பட்டினத்தில் அலுமினியத் தொழிற்சாலையின் கட்டமைப்புப் பணி முடிவுபெற்று அந்த ஆலை தொடங்கியவுடன் அங்கு உற்பத்தி செய்யும் அலுமினியத் தகடுகளின் விலையானது சர்வதேசச் சந்தையின் விலையைவிட இருமடங்கு கூடுதலாக இருக்கும்''

[தினமணி-தேதி நினைவில் இல்லை]

உயர்வான தொழில்நுட்பத்தை இந்தியாவின் தலையில் கட்டி இந்தியாவை ஏகாதிபத்தியத் தொழில் நுட்ப ஆதிக்கப் பிடியிலிருந்து எப்படி ஒருத்துக் கட்டியிருக்கிறார்கள் பிரஷ்னெவ் வாதிகள் என்பதைப் பாருங்கள்.

''சென்னை அக் - 25. ரசியா 1970-80களில் தயாரித்துக்கொண்டிருந்த டாங்கு ரகம் - T.72 என்பது ரசியத் தொழில்நுட்ப உதவியுடன் இவை இப்போது இந்தியாவில் தயாரிக்க ஏற்பாடாகியுள்ளது.'' [ரசியா இதைக் காட்டிலும் அதி நவீனமான T.80 டாங்குகளை இப்போது தயாரிக்கிறது].

''இப்போது T. 72 டாங்குகளின் பல்வேறு பாகங்களின் பெரும்பகுதி [95%. உறுப்புகள்] ரசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆனால் இன்னும் இரண்டு ஆண்டுகளில் டாங்கு

படிப்பகம்

www.padippakam.com



> உற்பத்தியில் பாதியளவுதான் இறக்குமதி செய்யப்படும். அதற்கடுத்த ஒரு ஆண்டுக்குப் பிறகு இறக்குமதி 5%. ஆகக் குறைக்கப்பட்டு விடும் என்று ஆவடி டாங்குத் தொழிற்சாலையின் பொது மேலாளர் என் - பாண்டியன் தெரிவித்தார்.',

[தினமணி—30. 11. 85]

கோர்பசேவ்வாதிகள் இந்தியாவையும் மற்றும் மூன்றாம் உலக நாடுகளையும் தங்களுடைய **ராணுவ அழிவுத் தொட்டியாகப்** பயன்படுத்துகிறார்கள் என்று நக்சல்பாரிகள் சொல்லும் போது... 'ஆ...! பயங்கரவாதிகள் அமெரிக்காவை ஆதரிக்கிறார்கள்' என்று விஷயத்தைத் திசை திருப்பிக் கொண்டிருக்கிறார்கள் திரிபுவாதிகள்.

மாஸ்கோ 10—15 ஆண்டுகளுக்கு முந்தையத் தொழில் நுட்பத்தை இந்தியாவில் கொட்டுகிறார்களே இது உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா? மாஸ்கோ வாதிகள் அப்பட்டமாகத் தங்களுடைய சார்பு ராணுவ அமைப்பாக மாற்றீடு செய்வதை நிருபணம் செய்ய வில்லையா? இந்நிலையில்,

> ''ரஷ்யாவைக் கலந்தாலோசிக்காமல் சுயமாக சுதந்திரமாக இந்தியா முடிவு எடுக்க முடியாதே?''

[தினமணி - 19. 11. 85]

என்று வாஜ்பாயி கேட்பது உண்மை தானே?

சாராம்சமாக, நாம் மேலே பார்த்த விஷயங்களைத் தொகுத்துப் பார்க்கும்போது, ரசியாவின் தொழிற்

படிப்பகம்

www.padippakam.com



கூட்டு மற்றும் கட்டுமானப்பணிகளானது ஒட்டுமொத்த மாக ஏகாதிபத்தியங்களுக்கே உரித்தான ஏமாற்றுதல், நிர்பந்தித்தல், தன் கால்களிலேயே மிதித்து வைத்துத் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டுதல் முதலான போக்குகள்தான் மாஸ்கோ திருடர்களிடமும் வெளிப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

# 4. இந்தியா பாகிஸ்தான் உறவுநிலையில் பிரஷ்னெவ்வாதிகளின் தகிடுதத்தங்கள்

இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் உள்ள உறவு நிலையில் கிட்டத்தட்டத் தெற்காசியப் பிராந்தியம் முழுவதிலும் இந்தியாவின் நிலைக்கு ஆதரவு என்பதுதான் உள்நாட்டு இடது, வலது போலிகள் உள்பட மாஸ்கோ வாதிகளின் கொள்கையாகும். காரணம் மாஸ்கோவாதிகளின் கொள்ளைக்குப் பெரிய தளமாக இருப்பது இந்தியாவே.

இந்தியா பாகிஸ்தான் உறவுநிலையில் இந்தியா கடைப்பிடிக்கும் போக்குகள் சரிதானா, நியாயமானதுதானா என்பதை முதலில் பார்ப்போம்.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையிலான வலிமையை ஒப்பு நோக்குகையில் பாகிஸ்தான் இந்திய மக்கள் தொகையில் நான்கில் ஒருபங்கிற்கும் சற்றுக் குறைவானதே. பூகோள ரீதியாகப் பார்க்கும்போது இந்தியாவின் நிலப்பரப்பில் 6-ல் ஒரு பங்கிற்குக் குறைவுதான் பாகிஸ்தானின் நிலப்பரப்பு. அதேபோல தேசிய வருவாயானது பாகிஸ்தானையும் இந்தியாவையும் ஒப்பு நோக்குகையில் மடுவுக்கும் மலைக்கும் உள்ள வித்தியாசம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



ராணுவபலத்தை பொருத்தவரை, இந்தியாவின் ராணுவ வலிமையானது பாகிஸ்தானை விட $1\frac{1}{2}$ மடங்கே அதிகமாக உள்ளது என்று 2.11.85 தினமணியில் குல்தீப்நய்யார் என்ற முதலாளிய வளர்ப்புப் பிராணி எழுதியுள்ளது. உண்மை இதைவிடப் பெரியதே.

ஆப்கானியப் போர்வை போர்த்தி நிற்கும் ருஷ்ய ராணுவக் கூட்டம் ஒரு பக்கமும், மற்றொரு பக்கம் சிக்கிமை விழுங்கிய, பங்களாதேசை வெட்டித் துண்டு போட்ட, நட்புறவு ஒப்பந்தம் என்ற பேரில் கோர்பசேவ் வாதிகளின் துணை ராணுவரெஜிமென்ட்களாக இருக்கும் இந்திய ராணுவம். இப்படித்தான் இன்றையப் பாகிஸ் தானின் வடக்கு மற்றும் மேற்கத்திய எல்லைகள் இருக் கின்றன. மேலும் பாகிஸ்தானானது இருமுறை பாசிச இந்திரா கும்பலின் படையெடுப்பால் ராணுவ மற்றும் பொருளாதார நாசத்தை அடைந்திருக்கிறது என்பதும் உண்மையாகும்.

இவ்வாறு நாம் எழுதுவதைப் பார்த்து சோவியத்தின் சொந்தக்காரர்களான இடது, வலது போலிகள், 'ஆ...! பார்த்தீர்களா? பாகிஸ்தானை ஆதரித்து பிரச்சாரம் செய்கிறார்கள்-ஜியாவின் வாரிசுகள், அமெரிக்க ஆதர வாளர்கள், தேசப்பற்றே இல்லாதவர்கள். பாகிஸ்தா னிற்குப் பரிந்து பேசுகிறார்கள், என்று பிணம் தின்பதற் காக ஊளையிடும் நரிகளைப் போல் ஊளையிடுவது நம் காதுகளுக்கு கேட்காமலில்லை.

நேர்மையான இதயம் கொண்டவர்கள், நாம் இவ்வாறு எழுதுவது பாகிஸ்தானிற்கு வக்காலத்து வாங்குவதற்கு அல்ல என்பதைப் புரிந்துவைத்திருப் பார்கள்.

பாகிஸ்தான் ஆட்சியாளர்களும் மாபெரும் கொலை காரர்கள் தான் — அவர்களுக்குப் பின்னால் சர்வ தேசிய

படிப்பகம்

www.padippakam.com



முழுமைக்கும் அமெரிக்கா பக்கபலமாக இருப்பதை நாம் மறுக்கவும் இல்லை. மறைக்கவும் இல்லை. பாகிஸதான் இப்படியென்றால்...

கோர்பசேவ் கும்பல்—இந்தியாவில் உழைக்கும் மக்களுக்கு எதிராக உள்ள ஆளும்வர்க்கத்தை ஊட்டி வளர்க்கிறது. அதற்குச் செஞ்சோற்றுக் கடன் தீர்க்க இந்திய ஆளும் வர்க்கம் — 'உலக சமாதானம்' என்று உலகத்தை ஏமாற்றும் ரஷயக்கும்பலுக்கு ஜால்ரா அடித்து வருகிறது.

பாசிச இந்திரா கும்பலும் அவர்களுடைய அந்தரங்கக் காரியதரிசிகளான இடது வலது போலி களும் அடிக்கும் பிரச்சார ஜால்ராவைக் கேளுங்கள் :

'பாகிஸ்தான் இந்தியாவை மிரட்டுகிறது. பாகிஸ்தான் டில்லியின் மீது அணுகுண்டுகளை வீச இருக்கிறது. எந்த நேரத்திலும் இந்தியாவின் தலையில் குண்டுகள் வெடிக்கும்' என்று. பாசிஸ்ட்கள் எப்படிப் பிரச்சாரம் செய்கிறார்கள் பார்த்தீர்களா? மேற்கண்ட பிரச்சாரம் தொடர்ந்து கொண்டு இருக்கையில் தான்...இந்திரா கும்பல் இந்திய உழைக்கும் மக்களை ஒடுக்குவதற்கான ஆயுதங்களை வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கிறது. இந்த புயற்பிரச்சாரத்தின் ஊடே தான் சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் படைத்தலைவர்களை பாசிச கோர்பசேவ் வாதிகள் இந்தியப் பாட்டாளி மக்களையும் அவர்களின் விடுதலைக்காகப் போராடும் நக்சல்பாரிப் புரட்சியாளர்களையும் கொன்றொழிப்பதற்கான ஆயுதங் களையும் ஆலோசனைகளையும் வழங்கிக்கொண்டிருக் கிறது. மேற்கண்ட பிரச்சாரங்களின் ஊடேதான் தங்களுடைய சோவியத் விசுவாயத்தை எசமானர் களுக்குக் காட்டி வருகிறார்கள் இந்திய வலது, இடதுகள்,

படிப்பகம்

www.padippakam.com



இவ்வாறாக, ஒரு புறத்தில் பாகிஸ்தான் யுத்த முஸ்தீப்பு என்ற பிரச்சாரம். மற்றொரு புறம் இந்திய ஆளும் வர்க்கங்கள் தங்களுடைய படைபலத்தைப் பலமடங்கு பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதை இனி பார்ப்போம்.

ஏப்ரல் 30-அன்று பாகிஸ்தான் தூதர் ஹுமாயுன் டில்லியில் சொல்லியதைக் கேளுங்கள்.

> ''சரியாகச் சிந்திக்கும் எந்தப் பாகிஸ்தானியும் சக்திவாய்ந்த மிகப்பெரிய நாடான இந்தியா மீது தனது நாடு படையெடுக்கும் என்று கற்பனை கூடச் செய்யமாட்டான்.''

மேலும் கூறுகிறார்.

> ''போர் மறுப்பு ஒப்பந்தம், நட்புறவு ஒப்பந்தம் ஆகியன பற்றி இரு நாடுகளும் பேச்சு நடத்த வேண்டும்.''

[தினமணி—2,5,85]

இப்படி பாகிஸ்தான் சொன்னவுடன் சமாதான வெண் புறாக்களான இந்திரா கும்பல் ஓடோடி அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றவில்லை. அதாவது பாகிஸ்தான் மீது படையெடுப்பதை இந்திய ஆளும் வர்க்கங்கள் கொள்கையளவில் கூட ஏற்றுக்கொள்ள வில்லை. மாறாக நட்புறவு ஒப்பந்தம் என்ற பிரச்சாரத்தின் மூலம் இந்திய மக்களின் காதுகளில் பூவைத்து வருகிறார்கள்.

அடுத்ததாக, சமாதானப் புறாக்களின் அணுகுண்டு பிரச்சாரத்தைப் பார்ப்போம்.

> ''அணுகுண்டு செய்வதைத் தடைசெய்யும் ஒப்பந்தம் ஒன்றை இந்தியாவும் பாகிஸ்தானும்

படிப்பகம்

www.padippakam.com



செய்து கொள்ளலாம். இத்தகைய உடன்பாட்டில் கையெழுத்திடப் பாகிஸ்தான் தயார்'' என்றும்

''பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிப்பதற்காக இந்தியாவிற்கு உள்ள அச்சத்தை அகற்றுவதற் காகத் தனது நாட்டில் உள்ள அணுசக்தி அமைப்புகள் அனைத்தையும் இந்தியா பார்வை யிடத் திறந்துவிடத் தயார். ஆனால் இந்தியா வும் அதன் அணுசக்தி அமைப்புகளைப் பாகிஸ் தான் பார்வையிட அனுமதிக்க வேண்டும்''

[தினமணி—8-5-85]

என்று பாகிஸ்தானின் வெளியுறவுச் செயலர் நியாஜி ஏ. நியாக் என்பவர் மே-7-ஆம் தேதி பூட்டானின் தலை நகர் காட்மாண்டுவில் கேட்கிறார். இந்த அளவிற்குப் பாகிஸ்தான் இந்தியாவிடம் அழுது புலம்பியும் 'உலக சமாதானம்' எனப் பீற்றித் திரியும் பாசிச ராஜீவ் கும்பல் செவிமடுக்கவில்லை. மாறாகப் பாசிசப் பிரச்சாரங்களில் தன் உண்மை முகத்தை மக்களிடம் மறைத்து வருகிறது.

இந்திய அதிகாரி ஒருவர் பேசுவதைக் கேளுங்கள்...

''புதுடில்லி-செப்டம்பர்-18 இப்பிராந்தியத்தில் அணு ஆயுதப் போட்டியைத் தடுக்க முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்று இந்தியா வந்துள்ள 2 அமெரிக்க அதிகாரிகள் நேற்றுக் கூறிய யோசனையை **நிராகரித்துப் பேசிய இந்திய அதிகாரி** அணு ஆயுதங்களைத் தயாரிப்பதில்லை என்ற கொள்கையை இந்தியா கடைப்பிடித்து வருகிறதென்று கூறினார்.''

[தினமணி—20-9-85]

மேலும் கேளுங்கள்.

ர. உ.—3

படிப்பகம்

www.padippakam.com



> "பாகிஸ்தான் அணுகுண்டு தயாரித்து வருவதாக இந்தியா கூறி வருகிறது. இரு நாடுகளிலும் ஒன்றின் அணுசக்தி நிறுவனங்களை மற்றொன்று சோதித்துப் பார்க்க அனுமதிக்கலாம் எனப் பாகிஸ்தான் கூறிய யோசனையை இந்தியா நிராகரித்து விட்டது. இதனால் முழுப் பாது காப்பு கிடைக்காது என்பது இந்தியாவின் நிலை."
>
> [தினமணி—25-10-85]

ஆக, பாகிஸ்தானுடைய அழைப்பிற்குச் சமாதான ராஜீவ் கும்பல் செவிமடுக்கவில்லை என்பதே விஷயம். சரி, இனி இந்தியாவின் சமாதான சகவாழ்வுக்குரிய அணுகுண்டைப் பார்ப்போம். இந்திய பிரதமர் பாசிச ராஜீவ் அலறு கிறார் பாருங்கள்.

> "நாங்கள் அணுகுண்டு செய்வது பற்றி முடிவு செய்யவில்லை. ஆனால் அத்திசையில் சிந்தித்து வருகிறோம்.
>
> இன்று நாங்களும் முடிவு செய்யும் பட்சத்தில், சில வாரங்கள் அல்லது சில மாதங்களில் எங்களால் செய்துவிட முடியும்"
>
> [புதிய கலாச்சாரம்—ஜுலை 85]

இந்திய அணுசக்தி கமிஷன் தலைவர் கூறியது...

> "பாகிஸ்தான் அணு ஆயுதம் தயாரிப்பதாகத் தனக்கு ஏதும் தகவல் இல்லை என்று அணுசக்தி கமிஷன் தலைவர் ராஜா ராமண்ணா அறிக்கை விட்டிருக்கிறார்."
>
> [அதே புதிய கலாச்சார இதழில்]

படிப்பகம்

www.padippakam.com



மேற்கண்ட ராஜீவ் காந்தியின் வாக்குமூலத்திற்கும் ராஜா ராமண்ணாவின் அறிக்கைக்கும் உள்ள தொடர்பை நாம் கவனிக்க வேண்டும். இதிலிருந்து அணு ஆயுதம் தயாரிக்க வேண்டும் என்கிற அவசியம் யாரிடம் உள்ளது என்பது புரியவில்லையா?

> ''டில்லியில் நடைபெற்ற இந்திய அணுசக்தி மாநாட்டில் பேசிய ராணுவ நிபுணர்கள், இந்தியாவிடம் **அணுகுண்டை எடுத்துச் சென்று** ஒரு குறிப்பிட்ட இடத்தில் போடும் விமானம், போகும் போது அது வெடிக்க வேண்டிய தருணம் போன்ற தொழில் நுட்பங்கள் இருப்பதாகக் கூறினார்.''
>
> [தினமணி—17-7-85]

மேலும் கேட்போம்.

> ''புதுடில்லி ஆகஸ்ட்-10 பம்பாயில் பாபா அணு ஆராய்ச்சி மையத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 'துருவன்' என்ற பெரும் அணு உலை இயங்குநிலை அடைந்திருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 30 அணுகுண்டுகள் தயாரிப்பதற்கான புளுட்டோனியத்தை உற்பத்தி செய்யக் கூடிய திறன் உள்ளது 'துருவன்.'
>
> பாகிஸ்தானில் உள்ள யுரேனியம் செறிவூட்டும் அணு ஆலை உற்பத்தி செய்யக்கூடியதை விட துருவனின் திறன் மிக அதிகமானது. செறிவூட்டிய யுரேனியமும் அணுகுண்டுக்கு வெடி பொருளாகப் பயன்படக் கூடியது.''
>
> இந்த அணு உலையை சர்வதேசக் கண்காணிப்பின் கீழ்வைக்க வேண்டிய கடமை இந்தியாவிற்கு இல்லை.''
>
> [தினமணி—12-8-85]

படிப்பகம்

www.padippakam.com



பிரமித்து விடாதீர்கள். அடுத்ததாக இந்திய விமானப் படைத் தளபதி 'சவால்' விடுகிறார், கேளுங்கள்.

> ''செப்-25. கோயம்புத்தூரில் உள்ள விமானப் படைத் தளத்தில் இந்திய விமானப் படைத் தளபதி லாபன்டே கூறுகிறார்.
>
> ''தற்காப்பிற்கும் தாக்குதல் நடத்துவதற்கும் இந்தியா எப்பொழுதுமே தயார் நிலையில் உள்ளது. பாகிஸ்தானின் பெரும் அதிநுட்ப ஆயுதங்களுக்கு இணையான ஆயுதங்கள், போர் விமானங்கள் நம்மிடமும் உண்டு. எனவே எம்மைவிட பாகிஸ்தான் எந்த வகையிலும் வலுவான நாடல்ல.''

பாசிச ராஜீவ் கும்பலின் படை வீரர்களான இடது வலது போலிகள், மேற்கண்ட வகையில் இந்தியா பாகிஸ்தான் மீது படையெடுக்கத் தன்னை எப்படி ஆயுதபாணியாக்கிக் கொண்டு வருகிறது என்பதை உணரவேண்டும்.

அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் விமானங்கள். இந்தியாவில் இருப்பதாக ராணுவ நிபுணர்கள் கூறுகிறார்களே; அப்படியென்றால் இந்திரா கும்பல் அணுகுண்டுகளை வைத்துக் கொண்டே இல்லையென்று பொய்ப் பிரச்சாரம் செய்கிறது என்று தானே அர்த்தம்? இதைப் போலிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு புறம் பாகிஸ்தான் படையெடுக்கப் போகிறது என்று பிரச்சாரம் செய்துகொண்டே மறுபக்கம் ஆயுதங்களை வாங்கிக் குவிக்கவில்லையா? அதன் நோக்கம் என்ன? மக்களிடம் உண்மையை மறைக்க முடியுமா?

பாசிச வெறிபிடித்த இந்திரா, ராஜீவ் கும்பலை-உலக சமாதானத்தைப் பாதுகாப்பதாகக் கூறும் ரஷ்யா என்ன

படிப்பகம்

www.padippakam.com



செய்திருக்க வேண்டும்? குறைந்த பட்சம் கண்டித்திருக்க வேண்டும் இல்லையா? ஆனால் கோர்பசேவ்கள் கண்டிக்க வில்லை. கட்டித் தழுவுகிறார்கள். அதற்குப் பாது காப்பாக, பிரச்சாரம் செய்ய இந்திய மக்களின் உதிரத் தில் கொழுத்துத்திரியும் இடது வலது போலிப் பொது வுடமைவாதிகள். 'உலக சமாதானம்' எப்படி ஓங்கிப் பறக்கிறது பார்த்தீர்களா?

ருஷ்ய வெளிநாட்டுத் துணை மந்திரி 'மிகையீல் கபிஸ்தா' இஸ்லாமாபாத் அக்-12 மாஸ்கோவில், பாகிஸ் தானின் முஸ்லீம் நாளேட்டுக்கு அளித்த பேட்டியில்

> ''தெற்காசியாவில் உள்ள பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் அனைத்துடனும் நாங்கள் நட்புறவாகவே இருக்க விரும்புகிறோம். இந்த நாடுகள் இந்தியா வுடனான தங்கள் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளும் என்றே நம்புகிறோம்.''

> ''இல்லையென்றால் இந்தியாவுக்கும் அதன் அண்டை நாடுகளுக்கும் இடையே பிரச்சினை தோன்றினால் நாங்கள் இந்தியாவையே ஆதரிப் போம்.''

[தினமணி—13-10-85]

அப்படியென்றால் கோர்பசேவ் வாதிகள் இந்தியாவையே ஆதரிப்பார்கள், இதில் நியாயம் அநியாயம் பார்க்க மாட்டார்கள் என்பது தானே இதன் அர்த்தம்.

தெற்காசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் இந்தியாவின் சொற்படி கேட்க வேண்டும் என்று மாஸ்கோ முழங்குவதாகத் தானே இதை நாம் அர்த்தம் கொள்ள வேண்டும்?

படிப்பகம்

www.padippakam.com



இப்படி அப்பட்டமாக நியாயம் அநியாயம் பார்க்காமல் பாசிச ராஜீவ் கும்பலுக்குப் பாதுகாப்பளிக்கும் கோர்பசேவ் கும்பல் சர்வதேசப் பாசிஸ்ட்கள் என்பதேயன்றி வேறென்ன?

இங்கே நாம் தோழர் லெனின் கூறியுள்ளதைப் பார்ப்போம்.

> "ஒரு மனிதனை அவனது நண்பர்களைக் கொண்டு மதிப்பிடலாம். அவனது அரசியல் கூட்டாளிகள், அவனுக்காக வாக்களிப்பவர்கள் ஆகியோரைக் கொண்டு ஒரு மனிதனது அரசியல் வண்ணம் இன்னதென்று கூறிவிடலாம்."
>
> [லெனின்-தேர்வு நூல்கள்-தொகுதி-2. பக்-240]

மேற்கண்ட லெனின் கூற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில், பாசிசமயமாகிப் போன ராஜீவ் கும்பலுக்கு வாக்களிப்பதன் மூலம் ஆதரவளிப்பதன் மூலம் மாஸ்கோ வாதிகள் மரணவியாபாரிகளே என்பதும் பிரெஷ்னெவ் கும்பலின் சர்வதேச அடாவடித் தனங்களுக்கு வக்காலத்து வாங்குவதன் மூலம் இந்திரா கும்பலும், இடது வலது போலிச் சிகப்புகளும் பாசிச வெறியர்களே என்பதும் வெளிப்படையான ஒன்று.

www.padippakam.com

# 5. இந்தியாவிற்குக் குழிதோண்டும் மாஸ்கோவாதிகள்

ரஷ்யத் திரிபுவாதிகள் ஒருபுறம் இந்தியாவை உற்ற நண்பன் சமாதானப் புறா என்றும், பாகிஸ்தானை ஆக்கிரமிப்பாளன் ஏகாதிபத்தியத்தின் தொங்குதசை என்றும் பிரச்சாரம் செய்து கொண்டே, மறுபுறம் பாகிஸ்தானையும் தன் வலையில் வீழ்த்துவதற்கான முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள் என்பதும் அவ்வப்போது வரும் செய்திகள் நமக்கு சொல்கின்றன.

> ''1967-ல் மாஸ்கோவாதிகள் பாகிஸ்தான் தலையில் ரூ. 10 கோடிக்கு ஆயுதங்களைக் கட்டினார்கள்; அதே காலத்தில் இந்தியாவிற்கு S. V. 7 என்ற குண்டு வீச்சு விமானங்கள் 100 ஐ ஏற்றுமதி செய்தார்கள்.''
>
> [கரடியின் பிடி இறுகுகிறது]

மாஸ்கோவாதிகளின் இவ்வியாபாரத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது ஏதாவது தென்படுகிறதா? சண்டையிட்டுக் கொள்ளும் இரு நாடுகளுக்கும் ஆயுத ஏற்றுமதி என்பது அப்பட்டமான ஏகாதிபத்திய வியாபாரப் போக்கேயன்றி வேறென்ன?

இன்றைய தினம் சண்டையிட்டு வரும் ஈரான், ஈராக் இரு நாடுகளுக்குமே மாஸ்கோ கும்பல் ஆயுத ஏற்றுமதி செய்து வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



G. R. மாத்து என்ற தேசிய மாநாட்டுக்கட்சியைச் சேர்ந்த M. P., 21. 3. 85 அன்று பத்திரிகை ஆதாரங்களுடன் பாராளுமன்றத்தில் பேசியுள்ளதைக் கேளுங்கள்.

> ''பாகிஸ்தான் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள காஷ்மீர் பகுதிகளில் மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்காக ரஷ்யா இருஜெனரேட்டர்களை வழங்க முன்வந்திருக்கிறது.''
>
> ''இப்படி ரஷ்யா செய்திருப்பதன் மூலம் பாகிஸ்தான் சட்டவிரோதமாக ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதை ரஷ்யா அங்கீகரிக்கிறது என்று கூறிக் கவலையும் தெரிவித்தார்.''
>
> [தினமணி-23.3.85]

மேலே பாகிஸ்தான் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள காஷ்மீர் பகுதிகளில் என்று 'மாத்து' கூறுவதை நாம் படிக்கும்போது பாகிஸ்தான் ஆக்கிரமித்துக்கொண்டுள்ளதாக இந்திய ஆளும் வர்க்கங்களால் சொல்லப்படும் பகுதியில் என்று புரிந்து கொள்ளவேண்டும் என்பது எனது வேண்டுகோளாகும். ஆக இந்தியாவின் நிலைக்குத்தான் எங்கள் ஆதரவு என்று அடுப்படி முதல் ஐ. நா. சபை வரை பகிரங்கமாக ஊளையிட்டுவிட்டு, ரகசியமாகப் பாகிஸ்தானுக்கும் ஆதரவு கொடுத்து பிரெஷ்னெவ் கும்பல் சோரம் போகிறது!

ஃபாக்லாந்து விவகாரத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் நடந்து கொண்ட முறைக்கும் ருஷ்யாவின் இச் செயலுக்கும் என்ன வித்தியாசம் என்று இடது, வலது போலிச் சிவப்புகள் சொல்வார்களா?

www.padippakam.com

# 6. இந்தியாவில் பிரெஷ்னெவ் கும்பலின் சீர்குலைவு வேலைகள்

பிரஷ்னெவ் கும்பலானது இந்திய ஆளும் வர்க்கங்களுடன் எந்த அளவுக்குக் கைகோத்து அலைகின்றதோ அதே அளவுக்குத் தங்களுக்கு மேலும் மேலும் சாதகமான நிலைமைகளை அடைய, சீர்குலைவு மற்றும் குழிபறிப்பு வேலைகளையும் இந்தியாவில் செய்துகொண்டிருக்கிறது.

பிரஷ்னெவின் வாரிசுகளில் ஒருவனே கோசிஜின்-பாகிஸ்தான் மீது படையெடுக்கும்படி இந்தியாவை நிர்ப்பந்தித்ததாக மொரார்ஜிதேசாய் ஒருமுறை கூறியதாக நினைவு.

ஜனதாவை உடைத்துத் தங்கள் கொள்ளைக்கு முன்னுரிமை அளிக்கக்கூடிய இந்திரா கும்பலை அரியாசனத்தில் ஏற்ற பிரஷ்னெவ் கும்பல் 'பகுகுணா' விற்கு லஞ்சம் கொடுத்துப் பயன்படுத்தியது.

இங்குள்ள ஓட்டுப்பொறுக்கிகளுக்கு பிரஷ்னெவ் வாதிகள் அவ்வப்பொழுது எலும்புத் துண்டுகளை வீசிக் கொண்டேயிருக்கிறார்கள். நம்நாட்டு ஓட்டுப் பொறுக்கிகளும் அவைகளைப் பொருட்படுத்துவதில்லை, போலிப் பொதுவுடமைவாதிகள் உட்பட.

இதுபற்றி, மோகன் குருஸ்வாமி என்பவர் தன் கட்டுரை ஒன்றில், அமெரிக்க ஏகாதிபத்தியமும்

படிப்பகம்

www.padippakam.com



எலும்புத்துண்டுகளை வீசுவதாகக் கூறுகிறார். அதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். அவர் எழுதுகிறார்...

> ''எவ்வளவோ ரஷ்யப் பணம் கம்யூனிஸ்டுகள் சோவியத் ரஷ்யாவுடன் வியாபாரத் தொடர்புள்ள நிறுவனங்களில் இருந்து நன்கொடை பெறுகிறார்கள்.''
>
> ''வரும் பணத்தில் வேறு கட்சிகளுக்கும் பங்குண்டு.''
>
> ''காங்கிரஸ், ஜனதா ஆகிய இருகட்சிகளுக்குமே இதுபோன்ற வருவாய் உண்டு.''
>
> [தினமணி—30.11.85]

குருஸ்வாமி சொல்வதை நாம் முழுமையாக நம்பாவிட்டாலும் அதைப் புறக்கணித்துவிட முடியாது. அதாவது இடது வலது சிவப்புகள் மாஸ்கோவாதிகள் வீசி எறியும் எலும்புத் துண்டுகளைக் கவ்வுகிறார்கள் என்பதையும் மறைத்துவிட முடியாது. இனி இவர்கள் லட்சணத்தைப் பார்ப்போம்.

> இடது வலது பன்றிகள் அனைவருமே ஓட்டுச் சீட்டு வியாபாரப் பருவங்களில் மற்ற ஓட்டுப் பொறுக்கிகளின் ஆடம்பரம், படாடோபம் ஆகிய வற்றிற்குக் கொஞ்சமும் சளைக்காமல் தாங்களும் செலவு செய்கிறார்கள்.

இவர்கள் ஓட்டுப்பொறுக்குவதற்கான நிதி என்று தங்களால் அடிமையாக்கப்பட்டிருக்கும் எமதருமை உழைப்பாளிகளிடமிருந்து உறிஞ்சுவது இவர்களின் ஆடம்பர அலங்கார வேலைகளுக்குப் போதுமானதாக இருக்கமுடியாது. அடுத்ததாக நம்பூதிரிபாடு கட்சியானது...

படிப்பகம்

www.padippakam.com



டெல்லி மாநகரில் புரட்சிப்போராட்டப் பாசறையை நிர்மாணிக்க (கட்சியின்மைய அலுவலகம் கட்ட) இந்தியப் பாட்டாளிவர்க்கப்படைத் தளபதியும் ஏகாதிபத்தியங் களுக்குத் தொண்டூழியம் செய்துகொண்டிருக்கும் தரகனு மான TATA விடம் ரூ 2 லட்சம் நன்கொடை பெற்றிருக் கிறார்கள்

[புதிய கலாச்சாரம்]

இப்படி டாடாவிடமே துண்டேந்தும் இந்த நம்பூதிரிக் கூட்டம் தன் எஜமானனான பிரெஷ்னெவ் கூட்டத்திடம் பிச்சையெடுப்பது என்பது உண்மையே.

இப்படிப்பட்ட அரசியல் ஏஜெண்டுகளை வைத்துத் தான் பிரஷ்னெவ் கும்பல் இந்தியாவில் தன் ஆதிக்கத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் உயிர் நண்பன் எங்கள் சோசலிச சோவியத் ஒன்றியம் இந்தியாவின் ராணுவ பலத்தைப் பெருக்குவது ஏன்?

இந்தியாவையே பாதுகாப்பது எங்கள் பங்காளி களான மாஸ்கோ மைனர்கள்தான். ஏன் இந்தப் புவிக் கோளின் பௌதீகத் தன்மையை ஏகாதிபத்தியவாதிகள் அழித்துவிடாமல் பாதுகாப்பதும் எங்கள் சோஷலிச ஒன்றியம்தான் என்று காயத்திரி மந்திரம் போல் போலி கள் உச்சரித்துக் கொண்டிருப்பதானது நாளொருமேனி யும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதை நாமறிவோம். உண்மை இதுதானா? இல்லையே!

உலக முழுவதிலிருந்தும் (கீழை நாடுகள் என்று சொல்லப்படும் சிறைச்சாலைகளைத் தவிர) அவ்வப் பொழுது மாஸ்கோவின் உளவாளிகள் சீர் குலைவு வாதிகள் வெளியேற்றப்படுவது என்பது அன்றாடம் தினசரிகள் சொல்லும் செய்திகள்,

படிப்பகம்

www.padippakam.com



மாஸ்கோவாதிகளின் இந்தச் செயல்கள் சரியா தவறா என்பதை நாம் இங்கு பரிசீலிக்கவில்லை. ஆனால் மாஸ்கோவாதிகளின் இந்நடவடிக்கைகள் அனைத்தையும் 'டாசை'யும், 'பிராவ்தா'வையும் முந்திக்கொண்டு இங்கிருக்கும் இடது வலது ஏவலர்கள் சோசலிச சோவியத்தின் மீது ஏகாதிபத்தியவாதிகள் அவதூறுப் பிரச்சாரம் செய்கிறார்கள் என இவர்கள் பிரச்சாரம் செய்வதில் தவறியதே இல்லை.

அந்த நாடுகள் தான் பொய்ப்பிரச்சாரம் செய்கின்றன என்பதை நாம் வாதத்திற்காக ஒத்துக் கொள்வோம். ஆனால் மாஸ்கோவாதிகளின் ஆருயிர் நண்பருமான ருஷ்யாவின் ராணுவ வண்டியில் ஒரு திருகாணியாக இணைக்கப்பட்டிருக்கும், இந்திய ராணுவத்தின் எஞ்சியிருக்கும் சிறுசிறு ரகசியங்களையும் K.G. B-யின் திருடர்கள் கொள்ளையடிக்க வில்லையா?

இந்தக் கொள்ளைக்குக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் வியாபாரம் செய்து கொண்டிருந்த கூமர் நாராயணன் என்பவன் துணை போனதாக அனைத்துப் பத்திரிகைகளும் பறைசாற்ற வில்லையா?

இப்படித் தன்னுடைய நண்பன் வாயிலேயே விஷம் ஊற்றும் பிரஷ்னெவ் கும்பலை ஏகாதிபத்திய வெறி நாய்கள் என்று நாம் சொன்னால் போலிச் சிவப்புகளுக்கு புடைக்கின்றன நரம்புகள்!

தன்னுடைய தாயை இன்னொருவன் துகிலுரியும் போது அவனை வெட்டி வீழ்த்தாமல் வேடிக்கை பார்ப்பவனை, அவனுடன் கூடிக் கும்மாளம் போடுபவனை எச்சில் பொறுக்கி ஏவல் நாய்கள் என்று நாம் சொன்னால் எப்படித் தவறாகும்?

அப்படித்தானே K.G.B. இந்திய ராணுவ ரகசியங்களைக் கொள்ளையடித்தபோது இடது வலது போலிகள்

படிப்பகம்

www.padippakam.com



நடந்து கொண்டது. இந்த உளவு வேலையில் வாசிங்டனாக இருந்தால் என்ன? மாஸ்கோவாயிருந்தால் என்ன? இரண்டுமே வெட்டியெறிய வேண்டிய கள்ளிகள் தானே!

இந்த உளவு வேலை என்பது இன்று நேற்று நடப்பது அல்ல. ஏறக்குறைய 25-ஆண்டுகளாக நடப்பதாகப் பத்திரிகைகள் சொல்கின்றன.

அப்படியென்றால் மாஸ்கோவாதிகள் வாயில் புன்னகையுடனும் மடியில் கத்தியுடனுமே இந்தியாவை வட்டமிட்டிருக்கிறார்கள், இன்றும் இருக்கிறார்கள் என்பதே இதன் அர்த்தம்.

1985 மே 9-ஆம் தேதி உள்துறை மந்திரி சவான் ராஜ்ய சபையில் சொல்கிறார்...

> ''பிரான்ஸ், போலந்து, கிழக்கு ஜெர்மனியைச் சேர்ந்த மூவரும் மாபெரும் ரஷ்யத் தூதரகத்தைச் சேர்ந்த ஒரு ரஷ்ய அதிகாரியும் இந்த உளவு விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருந்தனர்.''

மந்திரியின் புலம்பல் தொடர்கிறது:

> ''புலன் விசாரணையில் பெயர் குறிப்பிடப்பட்ட இந்த அயல்நாட்டுத் தூதரக அதிகாரிகள் யார் மீதும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. அவர்கள் மீது வழக்குத் தொடரவும் உத்தேசம் இல்லை.''

[தினமணி—11-5-85]

இந்திய ஆளும் வர்க்கங்கள் தேசிய வாதிகளாக இந்த உளவு வேலையைத் தொடர்ந்து மேற்கொண்டிருப்பார்கள். இந்த ஆளும் வர்க்கங்கள், சிவப்பு லும்பன்கள் புளுகுவதைப் போல ஏகாதிபத்திய சார்பாளர்கள் இல்லை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



''சரியான பாதையை மக்கள் ஆதரிப்பதை இது காட்டுகிறது. போலந்தின் சமூக அரசியல் வாழ்வில் சகஜநிலை திரும்பி வருகிறது. சோசலிச ஜனநாயகமும். கூட்டத்தின் ஆட்சியும் நிலை நாட்டப்பட்டு வருகிறது. எங்கள் நாட்டின் கடினமான பிரச்சனைகளை இந்தியா புரிந்து கொண்டிருப்பதற்கு நன்றி கூறுகிறேன்.''

[தினமணி—13.2.85]

நாம் இங்கே கவனிக்க வேண்டிய இடது வலது போலிகளால் போலந்தின் பிரச்சினைகளுக்குக் காரண மாகப் பிரச்சாரம் செய்யப்பட்ட வாலேசாவையும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் ஜாருஜெஸ்கி குறிப் பிடாதது.

அடுத்து, ஜாருஜெஸ்கி தன்னுடைய அரசு எடுத்து வரும் முயற்சிகளை மக்கள் ஏற்பது அதிகரித்து வருகிறது என்று 11. 2. 85 அன்று புளுகியதற்கும் பின்பு—தான் 1. 5. 85 அன்று வார்சாவிலே மக்கள் போராட்டம் நடத்தினார்கள் என்பதற்குமான முரண்பாட்டை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதன் மூலம் நாம் அறிவது மாஸ்கோவின் கைக்கூலி யாகவும் போலந்தின் ராணுவ சர்வதிகாரியாகவும் இருந்து வரும் ஜாருஜெஸ்கியின் ஆட்சியின் வார்சா வீதிகளில் சோஷலிசப் பூக்களிலிருந்து தேன் பாயவில்லை. மாறாக ராணுவ பீரங்கிகளும் அடக்குமுறை ஆயுதங்களும் அணி வகுத்து நிற்கின்றன. அதனால் மக்கள் போராடுகிறார்கள் என்பதேயாகும்.

இத்தகைய மக்கள் போராட்டங்களை அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் ஆதரிக்கப்படும் வாலேசா தொழிற்

படிப்பகம்

www.padippakam.com



யென்று கூறமுடியுமா? ஆனால் மந்திரி அப்படியெல்லாம் பேசாமல் அப்பட்டமாக ஒரு தரகுக் கூட்டத்தின் குரலைத் தானே எதிரொலித்திருக்கிறார்?

மந்திரி இப்படி பேசியதிலிருந்து 2 விசயங்கள் தெளிவு:

1. பிரஷ்னெவ் கும்பல் தன் காலனி நாடுகளான போலந்து, கிழக்கு ஜெர்மனி முதலான தன் படையாட்களைக் கொண்டு, தான் தலைவனாக நின்று இந்தியாவில் உண்மையாகவே உளவு வேலை பார்த்திருக்கிறது.

2. பிரஷ்னெவ் கும்பலின் இப்படிப்பட்ட அடாவடித் தனங்களை எதிர்த்துப் போராடும் வக்கில்லாமல் மேலும் அவர்களின் ஆதிக்கத்திற்குத் துணை போகும் அடிமைக் கூட்டங்களாகவே போலிச் சிவப்புகள் உள்பட இந்திரா கும்பல் இருக்கின்றது என்பது மாகும்.

மாஸ்கோவாதிகள் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தங்களுடைய தூதுவராலயங்களில் தேவைக்கு அதிகமான எண்ணிக்கையில் பணியாட்களை வைத்திருக்கிறார்கள். இதில் இந்தியா மட்டும் விதிவிலக்கல்ல.

நாம் எந்த ருஷ்யத் தூதுவராலயத்திற்குச் சென்றாலும் இதைக் காணமுடியும். இவர்கள் அனைவரும் KGBயின் சீடர்களான கோர்பசேவ் கூட்டத்திற்குச் சேவை செய்பவர்களே.

மற்றொரு அநியாயத்தைப் பாருங்கள்...

> "மாஸ்கோவாதிகள் தாங்கள் அயல் நாடுகளுடன் செய்து கொள்ளும் தொழில் கட்டுமான வேலைகள் அனைத்திற்கும் தொழில் நிபுணர்கள் என்ற

படிப்பகம்

www.padippakam.com



முத்திரை குத்தப்பட்ட KGBயின் மோப்ப நாய் களை ஏற்றுமதி செய்கிறது.''

[கரடியின் பிடி இறுகுகிறது]

இத்தகைய அயோக்கியத்தனங்களையும் அடாவடித் தனங்களையும் எதிரிகள் நண்பர்கள் என்று பாராமல் அனைத்து நாடுகளின் மீதும் கட்டவிழ்த்துவிடும் ஏகாதிபத்தியத்தனங்களையே உயிர் மூச்சாகக் கொண் டிருக்கும் பிரஷ்னெவ் வாதிகள் துரோகிகளேயன்றி எப்படி லெனினிஸ்ட்டாக இருக்க முடியும்?

அடுத்து போலந்தைப் பார்ப்போம்.

''12. 11. 84 அன்று போலந்தின் சுதந்திர தினத்தைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் தனி யாகவும், ஆட்சியாளர்கள் [ஜாரு ஜெஸ்கி கும்பல்] தனியாகவும் கொண்டாடினார்கள்'.

[தினமணி—13.11.84]

அடுத்து ஜாருஜெஸ்கியின் பொருளாதாரச் சீர்குலை வையும் அடக்குமுறையையும் தாக்குப் பிடிக்க முடியாத

''போலந்தின் மக்கள் மேற்கு ஜெர்மனி சென்று தஞ்சம் கோருகிறார்கள்.''

[தினமணி—22, 29—11-84]

அடுத்த செய்தியையும் பாருங்கள்.

''1. 8. 85 அன்று நடைபெற்ற பதினைந்தாயிரம் பேர் கலந்து கொண்ட மேதினப் பேரணியின் போது அரசியல் கைதிகள் மற்றும் விலைவாசி உயர்வை எதிர்த்து மக்கள் போராட்டம் நடத்தி னார்கள். அப்போது மக்கள் வன்முறையில்

படிப்பகம்

www.padippakam.com


ஈடுபட்டார்கள். எனவே போலீசார் அவர்களை அடக்கி ஒடுக்கினார்கள்.''

[தினமணி—3.5.85]

ஆக, நாம் மேலே பார்த்த தகவல்களிலிருந்து பார்க்கும்போது பிரஷ்னெவ் கூட்டத்தால் ஆதரிக்கப்படும் ஜாருஜெஸ்கி கும்பலின் ஆட்சியில் போலந்தில் விலைவாசிகள் கொடூரமாக உயர்ந்திருக்கின்றன.

போலந்து மக்களின் வாழ்க்கைத்தரமானது மிகவும் மோசமாக உள்ளது.

போலந்து மக்கள் ஆளும் ஜாருஜெஸ்கி கும்பலை எதிர்த்துப் போராடுகிறார்கள். போலந்து மக்களை ஜாருஜெஸ்கி கும்பல் துப்பாக்கி முனையில் அடக்கிக் கொண்டிருக்கிறது என்பது சூரியனாய்ப் பிரகாசிக்கும் உண்மை.

ஆனால் இந்தியாவின் வலது இடது போலிகளோ, போலந்தின் ராணுவ சர்வாதிகார ஆட்சியை மூடி மறைப்பதற்காக, மெல்ல மெல்ல வளர்ந்து வரும் இன்னும் முழுமையாக வளர்ச்சியுறாத போலந்தின் சோஷலிசப் பூங்காவை நாசம் செய்ய அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்து கொண்டு வரும் சதிவேலையே என்று பிரச்சாரம் செய்ததின் + செய்வதின் மூலம் ஜாருஜெஸ்கி + பிரஷ்னெவ் கும்பலைப் பாதுகாத்துக்கொள்கிறார்கள்.

ஆனால் இவர்கள் பீற்றித் திரிவதுபோல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதிவேலை என்பதே முழுமை யானதும் அடிப்படையானதும் அல்ல. இந்த ஜாருஜெஸ்கியே ஒத்துக் கொள்கிறான். 11. 2. 85 அன்று டெல்லியில் பேசும் போது,

''போலந்தின் உள்நாட்டு நிலைமை பற்றியும் கூற விரும்புகிறேன். அரசு எடுத்து வரும் முயற்சிகளை மக்கள் ஏற்பது அதிகரித்து வருகிறது,''

படிப்பகம்

www.padippakam.com



"சரியான பாதையை மக்கள் ஆதரிப்பதை இது காட்டுகிறது. போலந்தின் சமூக அரசியல் வாழ்வில் சகஜநிலை திரும்பி வருகிறது. சோசலிச ஜனநாயகமும். கூட்டத்தின் ஆட்சியும் நிலை நாட்டப்பட்டு வருகிறது. எங்கள் நாட்டின் கடினமான பிரச்சனைகளை இந்தியா புரிந்து கொண்டிருப்பதற்கு நன்றி கூறுகிறேன்."

[தினமணி—13.2.85]

நாம் இங்கே கவனிக்க வேண்டிய இடது வலது போலிகளால் போலந்தின் பிரச்சினைகளுக்குக் காரண மாகப் பிரச்சாரம் செய்யப்பட்ட வாலேசாவையும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் ஜாருஜெஸ்கி குறிப் பிடாதது.

அடுத்து, ஜாருஜெஸ்கி தன்னுடைய அரசு எடுத்து வரும் முயற்சிகளை மக்கள் ஏற்பது அதிகரித்து வருகிறது என்று 11. 2. 85 அன்று புளுகியதற்கும் பின்பு—தான் 1. 5. 85 அன்று வார்சாவிலே மக்கள் போராட்டம் நடத்தினார்கள் என்பதற்குமான முரண்பாட்டை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதன் மூலம் நாம் அறிவது மாஸ்கோவின் கைக்கூலி யாகவும் போலந்தின் ராணுவ சர்வதிகாரியாகவும் இருந்து வரும் ஜாருஜெஸ்கியின் ஆட்சியின் வார்சா வீதிகளில் சோஷலிசப் பூக்களிலிருந்து தேன் பாயவில்லை. மாறாக ராணுவ பீரங்கிகளும் அடக்குமுறை ஆயுதங்களும் அணி வகுத்து நிற்கின்றன. அதனால் மக்கள் போராடுகிறார்கள் என்பதேயாகும்.

இத்தகைய மக்கள் போராட்டங்களை அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் ஆதரிக்கப்படும் வாலேசா இந்தியப்



படிப்பகம்

www.padippakam.com



புதிய இடதுகளைப் போல, அமெரிக்கஏகாதிபத்தியத்தின் நலன்களுக்காகப் பயன்படுத்திக்கொள்கிறேன் என்பது தான் உண்மையேயொழிய மற்றபடி போலிச் சிவப்புகள சோஷலிசப்பூ ஜனநாயகம் என்பதெல்லாம் பிரச்சாரக் குப்பைகளே.

இப்படி நாற்றமெடுக்கும் மக்கள் விரோத ஜாருஜெஸ்கியின் ராணுவக் கூட்டத்திற்கு நண்பனாகவும் ஆலோசகனாகவும் தலைவனாகவும் இருக்கும் மாஸ்கோவாதிகள் பாசிஸ்டுகளேயன்றி பாட்டாளிகளின் தலைவர்கள் அல்ல.

படிப்பகம்

www.padippakam.com

# 7. ஆதிக்க வெறிபிடித்த மாஸ்கோக் கூட்டம்

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகளையே நேற்றைய பிரஷ்னேவ் முதல் இன்றைய கோர்பசேவ் வரை செய்து வருகிறார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியமோ ஜனநாயகம், மனித உரிமைகள் என்ற ஜபம் பண்ணிக்கொண்டே உலகத்தைப் புதைகுழியாக்கிக் கொண்டிருக்கிறது.

பிரஷ்னெவ் கூட்டமோ சமாதானம், சோஷலிசம் என்ற புன்னகையை உதிர்த்துக்கொண்டே உலகத்தைச் சுடுகாடாக மாற்றீடு செய்து கொண்டிருக்கிறது. சாராம்சத்தில் இருவருமே ஆதிக்க வெறிபிடித்த அடங்காப் பிடாரிகளே.

புரட்சியானது மக்களால் நடத்தப்படுவது, அதற்குப் பாட்டாளி வர்க்கம் தலைமையேற்கும் என்பது மார்க்சிய-லெனினியம் மற்றும் உலக வரலாறு நிரூபித்த உண்மையாகும். ஆனால் மாஸ்கோவாதிகளோ 3-வது உலக நாடுகளிலெல்லாம் தங்களுடைய ஏவலர்களை வைத்து ஆட்சியைக் கைப்பற்றுகின்ற அடாவடித்தனங்களைத் தான் புரட்சி என்று பிரச்சாரம் செய்கிறார்கள். அதற்கு இந்தியப் போலிச் சிவப்புகளும் துணை போகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



பிரஷ்னெவ் கூறிய ஒரு செய்தி.

> "1973-ல் ரஷ்ய அதிபர் பிரஷ்னெவ் செக்கோஸ்லோவாகியத் தலைநகரான பிராக் நகரில் ஓர் உரையில்,
>
> "எரிபொருள் சக்தியின் (பெட்ரோல்) களஞ்சியமான வளைகுடா மீதும் கனிப்பொருள் களஞ்சியமான தெற்கு ஆப்பிரிக்கா மீதும் ஆதிக்கம் கொள்வது ரஷ்யாவின் குறிக்கோள்" என்று பிரஷ்னெவ் கூறியுள்ளார்.
>
> ['லண்டன் டைம்சி'லிருந்து மேற்கோள்
> A.N. சிவராமன் 9-11-86—தினமணி]

அடுத்ததாக, அக்டோபர் 26-1985 அன்று கோர்பசேவ் கும்பல் உருவாக்கிய 4-வது செயல் திட்டத்தின் நகலை 'டாஸ்' வெளியிட்டிருக்கிறது. அந்தச் செயல் திட்டத்தின் ஒரு பகுதி பின்வருமாறு சொல்கிறது.

> "சோசலிசச் சமூகத்தை உருவாக்குவதற்கான புறச்சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்."
>
> [தினமணி—27-10-85]

நாமெல்லாம் புரட்சி செய்ய வேண்டியதே இல்லை அண்ணன் கோர்பசேவே புறச்சூழலை உருவாக்கி இந்தியாவிலும் அரண்மனைப் புரட்சியை நடத்தி விடுவார். அதற்குத் துணையாகத்தான் நமது இடது வலதுகள் முன்கூட்டியே தொழுவத்திற்குள் ஓடிவிட்டனவோ?

இப்படிப்பட்ட புரட்சிகளைத்தான் மாஸ்கோவாதிகள் உலகம் முழுமையும் செய்து வருகிறார்கள். இவ்வாறு பிரஷ்னெவ் கூட்டத்தால் அரண்மனைப்புரட்சி நடத்தப்பெற்ற எதியோப்பியாவோ, மாஸ்கோவின்

படிப்பகம்

www.padippakam.com



ஆயுதத் திணிப்பாலும் இயற்கைச் சீற்றத்தினாலும் செத்துக் கொண்டிருக்கிறது. அங்கே சோவியத்கோதுமைக். கடல்களிலிருந்து உணவுத் தானியத்தை எடுத்துக் கொட்டவில்லை. ஏனென்றால் அவர்களும் உணவு விசயத்தில் பிச்சைக்காரர்கள் தானே!

மாறாக ஆயுதங்களைத்தான் கொட்டிக் கொண்டிருக்கிறது, பிணந்தின்னும் பிரஷ்னெவ் கும்பல். பசியாலும் பஞ்சத்திலும் பரதேசியாகிப் போன எத்தியோப்பிய மக்கள் 1984 டிசம்பரில் பக்கத்து நாடான சோமாலியாவிற்குக் கூட்டம் கூட்டமாகப் பசியைத் தீர்க்கச் சென்றபோது, மாஸ்கோவினால் எதியோப்பிய ராணுவ சர்வாதிகாரி 'மென்கிற்சு'விற்குக் கொடுத்த குண்டு விமானங்கள் அந்த மக்களைக் குண்டு வீச்சின் மூலம் கொன்றொழித்தது. இப்படிப்பட்ட மனிதப் படுகொலையை,

''உறுதிமிக்க நடவடிக்கை என்று பாராட்டினான் செர்னன்கோவ் என்ற பாசிஸ்ட் வெறிநாய்''

*[இலக்கு—சித்திரை-வைகாசி, 1985,*
*இலங்கைப் பத்திரிக்கை]*

இவ்வாறு, எரிந்து கொண்டிருக்கும் சோசலிசச் சொர்க்க பூமியான எதியோப்பியாவில், எரிகிற வீட்டில் பிடுங்கியதே ஆதாயம் என்ற நிலையில் மேற்கத்திய ஏகாதிபத்தியவாதிகள் உணவையும் மருந்தையும் வீசிக் கொண்டிருக்கிறார்கள். எத்தியோப்பியாவோ எரிந்து கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட வயிற்றெரிச்சலிலும் எத்தியோப்பியத் தலைவன் மாஸ்கோ போகிறான். அவனுக்குக் கோர்பசேவ் விருந்தளிக்கிறார்,

படிப்பகம்

www.padippakam.com



''மாஸ்கோ நவம்பர்-2-1985. மாஸ்கோவிற்கு வருகை புரிந்த எத்தியோப்பிய நாட்டுத் தலைவர் 'மங்கிட்ஸூ ஹெய்லி மெரியத்தை'க் கௌரவித்து கிரெம்ளினில் வெள்ளி இரவு அளித்த விருந்தில் சோர்பசேவ் பேசினார்.''

[தினமணி—4-11-85]

எத்தியோப்பிய மக்களைக் கோர்பசேவ் கூட்டம் எப்படிக் காப்பாற்றுகிறது பார்த்தீர்களா?

அடுத்ததாக ஆப்கானைப் பார்ப்போம்.

பிரஷ்னெவ் கும்பலானது ஆப்கானிலும் ஓர் அரண் மனைப் புரட்சியை நடத்தி 6 ஆண்டுகளுக்கும் மேலாக ஆப்கானில் சோஷலிச ரோஜாக்களைப் பயிர் செய்து வருகிறது. ஆப்கானிய மக்களோ அனுதினமும் ரஷ்ய பாசிஸ்ட்களை எதிர்த்துப் போராடி வருகிறார்கள். மாஸகோவின் ஆப்கானிய ஆக்கிரமிப்பால் 50-லட்சத் திற்கும் மேற்பட்ட மக்கள் வெளிநாடுகளில் அகதிகளாக இருக்கிறார்கள்.

நம்பூதிரி+ராஜேஸ்வரராவ் கும்பலின் போலிப் பிரச்சாரப்படி 50 லட்சம் C.I.A-க்கள் வெளிநாடுகளில் உள்ளார்கள். பின்வரும் தகவலைப் பார்ப்போம்.

''பாங்காக் அக்-20-ஆப்கானிஸ்தான் அகதிகள் சுமார் இருபத்தைந்து லட்சம் பேர் பாகிஸ் தானில் தஞ்சம் புகுந்துள்ளனர்.
''மேலும் பத்தொன்பது லட்சம் அகதிகள் அடைக்கலம் தேடி ஈரானுக்குச் சென்றுள்ளனர்.''

[தினமணி—22-10-85]

இத் தகவல்களை அகதிகளுக்கான ஐ. நா ஹைகமிஷனர் இன்று தெரிவித்தார். பிரஷ்னெவ் கூட்டம் எப்படி

படிப்பகம்

www.padippakam.com



மக்கள் ஜனநாயகத்தை ஆப்கனில் மலர்வித்திருக்கிறது பார்த்தீர்களா?

இப்படி அகதிகளாக ஆக்கிரமிப்பாளர்களால் அடித்து விரட்டப்படும் ஆப்கானிய மக்கள் ஓடிவிடவில்லை. அவர்களும் தொடர்ந்து போராடுகிறார்கள்.

> "ரஷ்ய ஏகாதிபத்தியமே ஆப்கானை விட்டு வெளியேறு, ஆப்கன் புரட்சியாளர்களே ஒன்று படுங்கள்!"
>
> [தினமணி—23-3-85]

என்று டெல்லியிலே முழங்குகிறார்கள் ஆப்கான் போராளிகள். சமீபத்தில் இந்திய பாசிஸ்ட் ராஜீவ் காந்தி மாஸ்கோ மன்னர்களைத் தரிசிக்க ஓடியிருந்த போதுகூட ஆப்கான் தொடர்பான குதர்க்கம் நடந்தது. செய்தியை முதலில் பார்ப்போம்.

> "புதுடெல்லி மே. 30—மாஸ்கோவில் ருஷ்யத் தலைவர்களுடன் பிரதமர் ராஜீவ்காந்தி பேச்சு நடத்தியபோது ஆப்கான் பிரச்சனை பற்றி கடும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகத் தெரிகிறது.
>
> "பிற நாடுகளின் விவகாரங்களில் தலையிடாக் கொள்கையைக் கூட்டறிக்கையில் சேர்க்க வேண்டும் என்று இந்தியா வற்புறுத்தியது. ஆப்கான் பிரச்சனையில் அணிசேரா இயக்கம் கொண்டுள்ள நிலை இது.
>
> "ஆனால் ருஷ்யா இதைச் சேர்க்க மறுத்து விட்டது. அந்த வார்த்தைகளைச் சேர்த்தால் அது தங்களைக் குறை கூறுவதாகும் என்று கூறியது,

படிப்பகம்

www.padippakam.com



> ''ரஷ்யா தனது எதிர்ப்பைக் கடுமையாகவே தெரிவித்தது. கூட்டறிக்கை வெளியிட வேண்டாம்; அப்படி வெளியிட்டால் ஆப்கான் பற்றிய பேச்சே இருக்கக் கூடாது என்று ரஷ்யா கூறியது.''

*[தினமணி—1-6-85]*

அடிமைகளின் கோரிக்கைகளை ஆண்டைகள் ஏற்றுக் கொண்டதாக வரலாறு கிடையாது! அப்படித்தான் ராஜீவின் கோரிக்கையும் போனது. ஆப்கானைப் பற்றிப் பேசவே கூடாதாம்!

இந்திய வெளியுறவுக் கொள்கையைப் பாராட்டு கிறோம் என்று பாடித் திரியும் பண்டாரப் போலிச் சிவப்புகளே, ஆப்கானிய விவகாரத்தில் உங்கள் கொள்கை யைக் குப்பையில் வீசியெறிந்திருக்கிறார்களே கோர்பசேவ் கூட்டம்! அதற்கும் சம்மதம் தானே!

அடுத்ததாக நவம்பர் 13-1985-ல் ஆப்கானிலிருந்து அன்னியத் துருப்புகள் வெளியேற வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைப் பாகிஸ்தான் கொண்டு வந்திருக்கிறது.

> ''பாகிஸ்தான் கொணர்ந்த இந்த யோசனை களுக்கு ஆதரவாக 122 - வாக்குகளும் எதிராக 19 வாக்குகளும் கிடைத்தன.''

இதைப் போன்ற தீர்மானம் நிறைவேற்றப்படுவது என்பது இதோடு 7-வது முறையாகும். எல்லாவற்றையும் வீசியெறிந்து விட்டுத்தான் ஆப்கானை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது கோர்பசேவ் கூட்டம்.

> ''டிசம்பர் 18—1985 அன்று மட்டும் 1000க்கும் மேற்பட்ட ஆப்கான் புரட்சியாளர்களை சோவியத் ராணுவம் கொன்றொழித்தது.''

*[தினமணி—20. 11. 85]*

படிப்பகம்

www.padippakam.com



என்றால் கோர்பசேவின் கோரப்பற்கள் எப்படி நீளுகிறது என்பதை உங்களால் அறியமுடிகிறதா? இவ்வாறு ஆப்கானை ஆக்கிரமித்துக் கொண்டு அந்த மக்களை அடித்து விரட்டுகிறார்கள்.

சர்வதேச நெறிமுறைகளை மீறுதல்—போராடும் மக்களைக் கொன்றொழித்தல் முதலான அயோக்கியத்தன மான மாஸ்கோவின் நடவடிக்கைகளை நியாயப்படுத்து வதற்காக இடது-வலதுகள் அமெரிக்க ஏகாதிபத்திய மானது, ஆப்கானிலே மக்கள் ஜனநாயகத்தை மலர் வித்துக் காபூலைத் தலைநகராகக் கொண்டு சீரிய சோஷலிச ஆட்சி நடத்திவரும் எங்கள் தோழர் 'பாப்ரக் கார்மலின்' அரசை வீழ்த்தப் பார்க்கிறது. அதனால்தான் எங்கள் சோவியத் படைகள் ஆப்கானில் சோஷலிசக் கொடி பிடிக்கிறார்கள் என்று சொல்லித் திரிகிறார்கள்

அந்த மக்கள்ஜனநாயக அரசின் லட்சணத்தைப் பார்ப்போம்.

> ''புதுடெல்லி மே—25-1925—ஆப்கானிஸ்தான் தூதரக ஊழியர்கள் கடத்தி வந்த ஐம்பது லட்சம் பெறுமான இருபத்திமூன்று கிலோ தங்கத்தைச் சுங்க இலாகா அதிகாரிகள் கைப்பற்றி 3 பேரையும் கைதுசெய்துள் ளார்கள்.''
>
> [தினமணி—27. 5. 85]

இப்படிப்பட்ட தங்கக் கடத்திகள் தான் ஆப்கானிய ஆளுங்கூட்டம்.

> ''முஸ்லீம் மதம் புனிதமானது. அதைப் பேணிப் பாதுகாப்போம் என்று ஆப்கான் பொம்மை யாட்சியில் சட்டம் இயற்றியுள்ளனர்.''
>
> [புதிய ஜனநாயகம்-டிசம்பர் 16-31, 1985]

படிப்பகம்

www.padippakam.com



இப்படிப்பட்ட மதவெறிக் கூட்டம்தான் மக்கள் சனநாயகம் படைக்கிறதாம்!

> ''ரஷ்ய ஆக்கிரமிப்பாளர்கள் அபகரித்துள்ள ஆப்கானில் இன்னமும் இரவு 11 மணிக்குமேல் ஊரடங்குச்சட்டம் நீடிக்கிறது.''

[மேற்கண்ட அதே இதழ்]

பிரஷ்னெவ் ஆக்கிரமித்து இவ்வளவு நாள் கழித்தும் அங்கு ஊரடங்குச் சட்டம் நீடிக்கிறது என்றால் ஆப்கானிய ஆட்சியாளர்கள் பாசிஸ்ட்கள் அன்றி வேறென்ன? அப்படியென்றால் மக்களின் ஆதரவு துளியும் ஆப்கான் அரசுக்கு இல்லையென்று தானே பொருள்? இந்நிலையில் அங்கு மக்கள் சனநாயகம் எப்படி?

மாஸ்கோ மன்னர்களின் அரண்மனைப்புரட்சியானது ஆப்கான், எத்தியோப்பியாவில் மட்டுமல்லாமல், தெற்கு ஏமன், போர்ச்சுக்கல், கம்பூச்சியா முதலிய நாடுகளிலும் அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

# 8. பிரஷ்னேவ் கும்பலின் கலாச்சாரப் போக்குகள்

இதுவரை நாம் தோழர் ஸ்டாலின் மறைவிற்குப் பிறகு சோவியத் சோஷலிச உலகத்தை அழித்து அங்கே குருஷேவைத் தொடர்ந்து பிரஷ்னேவ் கும்பலானது எப்படி அதிகார வர்க்க முதலாளியத்தை மீட்டமைத்தது என்பதையும், அந்த நடை முறைகள் இன்றுவரை எப்படித் தொடர்கின்றன என்பதையும், ருஷ்யாவின் முதலாளிய மீட்சியின் விளைவுகள் சர்வதேச அரங்கில் எப்படி ஓர் ஏகாதிபத்தியப் போக்காக வெளிப்படுகின்றன என்பதையும், நமக்குக் கிடைத்த ஆதாரங்களை வைத்துச் சுருக்கமாகப் பார்த்தோம்'

இனி மாஸ்கோ மன்னர்கள் ருஷ்யாவிலே சோஷலிசக் கலாச்சார ரோஜாக்களை எப்படிப் பயிர்செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் பார்ப்போம்.

'கலை இலக்கியம் யாவும் அந்தச் சமூக அமைப்பின் பொருளாதார அடித்தளத்தின் மேல்கட்டுமானங்களே' என்பது மார்க்சியம் காட்டும் உண்மையாகும்.

அதாவது சமூகத்தின் பொருளாதார இயக்கம் எந்தத் தன்மையில் இருக்கின்றதோ, அதற்கு இணையான, அதனுடன் பொருந்திச் செல்லக்கூடிய, அதனுடன் ஒத்துழைக்கக் கூடிய கலாச் சார வடிவங்களே அச்சமூகத் தில் ஆளுமை செய்யும் என்பதாகும்,

படிப்பகம்

www.padippakam.com


இதை அடிப்படையாக வைத்து இனி பிரஷ்னெவ் வாதிகளின் கலாச்சாரப் புரட்சியை நோக்குவோம்.

> ''ரஷ்யச் சிற்பி ஒருவர் காந்திசிலை ஒன்றை உருவாக்கியிருக்கிறார் அதை அவர் இந்தியா விற்குப் பரிசளிப்பார்.''
>
> [தினமணி—19. 9. 9. 84]

புரட்சியின் அடுத்த பாய்ச்சல்—

> ''6. 2. 85 அன்று ருஷ்யாவில் காந்திஜியின் வாழக்கையைப் பற்றிய நூல் ஒன்று வெளியிடப் பட்டது.''
>
> [தினமணி—8. 12. 85]

இன்னுமொரு கலாச்சார வளர்ச்சி—

> ''செக்கோஷ்லோவோகிய சோஷலிச ஒன்றியமும் சோஷலிச இந்தியாவும் நட்புறவுடன் மாபெரும் மார்க்சியவாதியான அண்ணன் நேருவைப் பற்றி சினிமா எடுத்துள்ளனர். இது T. V. யில் மே. 27-1985 அன்று காண்பிக்கப்படும்''
>
> [தினமணி—5. 5. 85]

அடுத்து ஒரு தகவல் மே. 23-அன்று மாஸ்கோவில் நடைபெற்ற ருஷ்யாவில் உள்ள தொழிற்சங்க அரங்கில் நடந்த பேரணியில் பேசிய ரஷ்ய முதலாவது துணை முதல்வர் 'ஆர்க்கிபோவ்',

> ''இந்தியர்களின் சாதனைகளுக்கு நேரு இந்திராவின் கொள்கைகள் முக்கிய காரண மாகும். நாட்டிற்குப் புத்துணர்வூட்டி மிகப்

படிப்பகம்

www.padippakam.com



பெரிய சக்தியாக மாற்ற அவர்கள் மிகவும் பாடு பட்டனர்''

[தினமணி—26. 5. 85]

என்று புகழ்ந்தான். கலாச்சாரத்தில் மீண்டும் படி நிலை முன்னேற்றமடைகின்றார்கள், பாருங்கள்:

''சர்வதேசப் பாட்டாளிவர்க்கத் தலைவரும் இந்திய விடுதலைப் புலியுமான 'ராஜீவின்' பெயரை ஒரு ரஷ்யப்பெண் தன் குழந்தைக்கு வைத்துக் கொண்டாள்.'' அடபாவமே!

[தினமணி—1. 6. 85]

கலாச்சாரப் புரட்சியை விரைவு படுத்துவது கடினமாக உள்ளதால் மாஸ்கோ மன்னர்கள் சோஷலிசக் கலாச்சாரத்தை 'சோயுஸ்' விண்கலத்தில் ஏற்றி ரஷ்யா முழுவதும் வேகமாகப் பரப்ப முடிவு செய்திருக்கிறார்கள். அதன் விளைவுகளை இனி நாம் பார்க்கலாம்.

சென்றவாரம் 85-ல் பாசிச ராஜீவ் மாஸ்கோ மன்னர்களிடம் மண்டியிடச் சென்றபோது,

''மாபெரும் லெனினிஸ்டான இந்திராவுக்கு சதுக்கம், நினைவுச் சின்னங்கள், இந்திராவையும் ராஜீவையும பற்றிய உயர்வான பிரச்சாரங்களை மாஸ்கோ மன்னர்கள் ருஷ்யாவில் கட்டவிழ்த்து விட்டார்கள்.''

[தினமணி—4.6.85]

அடுத்ததாக, கோர்பசேவ் ஒருபடி முன்னேறுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



> "காந்தியும், நேருவும், இந்திராவும் விளாதிமீர் இலியீச் லெனினும் இந்திய ரஷ்ய நட்புறவுக்கு வழிவகுத்ததாக கோர்பசேவ் புன்னகைத்தார்."
>
> [தினமணி 16-6-85]

கோர்பசேவ் கூட்டத்தின் எச்சிலுக்காக ஏங்கித் திரியும் எமதருமை வலது இடது பரதேசிகளே, இதெல்லாம் உங்கள் கண்கள் பார்த்ததுண்டா?

ஜூலை 15 - 1985 அன்று ரஷ்யாவின் தாஜிக் குடியரசில் உள்ள கல்விக் கழக மத்திய அறிவியல் நூலகத்திற்கு அறிவுலக மேதை இந்திராவின் பெயரைச் சூட்டினார்கள் மாஸ்கோ மன்னர்கள். இதற்கு இந்திரா பெயரிட்டதை மக்கள் வேறு வரவேற்கிறார்களாம்!

அடுத்த கலாச்சாரப் புரட்சியைப் அலாஸ்கா மலைத் தொடர்களுக்குக் கொண்டு செல்கிறார்கள், கோர்பசேவ் கும்பல்.

> "அ. கோளவ், வி. ஸிம்யானின் எழுதிய ஜவஹர்லால் நேரு [ஒரு முழுமையான வாழ்க்கைச் சித்திரம்]
>
> மனிதாபிமானியும், விடுதலை வீரரும் ஜனநாயகவாதியும், சோஷலிசத்தில் நம்பிக்கை கொண்டவரும், இந்தியத் தொழில் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி ஆகியவற்றிற்கு அடித்தள மிட்டவரும் கூட்டுச் சேரா இயக்கத்தின் கர்த்தாவும் ராஜதந்திரியும், சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரும் ஆன ஜவகர்லால் நேருவின் வாழ்க்கைக் கதையை, முழுமையாக, சுவையுடன் சொல்லும் தனிப்பெரும் நூல். உலகு புகழ் வரலாற்றாசிரியர்களால் எழுதப்பட்ட இந்நூல் மாஸ்கோ,

படிப்பகம்

www.padippakam.com



புரோகிராஸ் பதிப்பகத்தால் வெளியிடப் படு கிறது.

நேருவின் 96 ஆம் பிறந்தநாளான 14-11-85 ல் வெளியாகின்றது. விலை ரூ. 15. நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பி. லிமிடெட்''

[தினகரன்—14-10-85]

ருஷ்யப் புரட்டல்வாதிகளின் கலாச்சாரப் புர்ட்சியானது காந்தியையும் நேருவையுமே சுற்றி வருகிறதே என்று கசந்து விடாதீர்கள். இன்னும் பாருங்கள்.

பாசிஸ்ட் இந்திராவைப் பற்றி ருஷ்ய சனாதிபதி குரோமிகோவ் பின்வருமாறு புளுகுகிறான் :

''ருஷ்யர்களைப் பொருத்தவரை இந்திரா காந்தி இந்தியாவின் மொத்த உருவகமாகும். இப்போது திருமதி காந்தியைப் பற்றி நினைத்துப் பார்க்க வேண்டுமென்றால் இந்தியாவில் காலங்காலமாக இருந்துவரும் வரலாற்றைப் புரட்டிப் பார்க்க வேண்டும்.''

''அதே சமயம், இப்போது இந்தியாவின் உண்மை நிலவரங்களையும் இந்த மாபெரும் பெண்மணி யின் தலைமையின் கீழ் அந்நாடு கண்டுள்ள முன் னேற்றங்களையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.''

'ராஜீயத் துறையிலும் வெளிவிவகாரத் துறை யிலும் திருமதி காந்தி ஆற்றிய பணிகள் மிகவும் ஆக்கபூர்வமானவை.''

[தினமணி—31-10-85]

படிப்பகம்

www.padippakam.com



அடுத்ததாக, மாஸ்கோவின் கலாசாரப் புரட்சியில் ஸோஃபியாவும் பங்கேற்கிறது. அதாவது பல்கேரியாவின் தலைநகரான ஸோஃபியாவில் இந்திரா காந்தி பெயரில் பள்ளிக்கூடம் ஒன்று அமைத்திருக்கிறார்கள்.

அடுத்து இத்தகைய கலாச்சாரக் கூட்டணியில் கிழக்கு ஜெர்மனியும் அணி சேருகிறது. கிழக்கு ஜெர்மனியில் கிழக்கு பெர்லின் நகரத்தில் உள்ள ஒரு முக்கியத் தெருவுக்கு இந்திராவின் பெயரைச் சூட்டச் போகிறார்களாம்.

[10-11-85 தினமணி]

சலித்துவிடாதீர்கள், வியட்நாமிய வீரனும் கூட்டணியில் குதிக்கிறான். அதையும் பாருங்களேன்.

> ஹனோய் நவ-27. வியட்நாம் தலைநகரான ஹனோய் நகரின் முக்கிய பகுதியிலமைந்துள்ள பெரிய பூங்காவிற்கு இந்திரா காந்தியின் பெயர் சூட்டப்பட்டது.''

[தினமணி—30-11-85]

அடுத்து, எல்லாவற்றிற்கும் மேலாக, கலாச்சாரத்தில் மாபெரும் பாய்ச்சலை உண்டாக்குகிறார்கள்!

> ''இந்திரா நகர் டிசம்பர் 29-1985 மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் உருவச் சிலை பம்பாயில் முக்கியமானதொரு இடத்தில் நிறுவப்படும்.''

> ''சோவியத் சிற்பி 'காமோவ்' உருவாக்கவிருக்கும் வெண்கலத்தாலான இச்சிலை 7மீட்டர் உயரமுடையதாக இருக்கும்''

படிப்பகம்

www.padippakam.com



''அமைக்கவிருக்கும் சிலையின் மாதிரி வடிவத்தைச் சிற்பி 'காமோவ்' பம்பாய்க்குக் கொண்டு வந்துள்ளார். பிரதமர் ராஜீவ் காந்தி அதனை இன்று பார்த்தார்.''

''காங்கிரஸ் விழா முடிந்து மாஸ்கோ செல்லும் காமோவ் அடுத்த சில வாரங்களில் இந்திரா வெண்கலச் சிலையுடன் மீண்டும் இந்தியாவுக்கு வருகிறார். இந்திரா சிலை 10 மீட்டர் உயர பீடத்தின் மீது வைக்கப்படும்''

[தினமணி—31-12-85]

பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரம் படைக்கப் படைத் தோழர்கள் இடது வலதுகளின் பிடியில் சிக்கி ஏமாற்ற முற்றிருக்கும் தோழர்களே!

பாசிஸ்டுகளுக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கக்கூடிய கோர்பசேவ் கூட்டம் யார் யாரை முன்னிருத்துகிறார்கள், பார்த்தீர்களா?

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு ஏவல் நாயாகச் செயல்பட்ட காந்தியையும் நேருவையும் புரட்சிகரப் போராளி லெனினையும் ஒன்று சேர்க்கிறானே கோர்பசேவ், இதைவிட லெனினுக்கு வேறு துரோகம் இவன் செய்ய வேண்டுமா?

மேற்கு வங்க மாநிலத்திலே கல்வி அமைப்புகளில் மார்க்சியத்தின் வாடையே இருக்கக்கூடாது என்று கர்ஜிக்கும் ராஜீவுக்குப் பந்தி விரிக்கும் பாசிச கோர்பசேவ் கூட்டம் எப்படி மார்க்சிய வாதிகளாக இருக்க முடியும்?

மார்க்சிய லெனினியவாதிகளைக் கொன்றொழிப் பதையே தன் தொழிலாகக் கொண்டிருந்த நேருவையும்



படிப்பகம்

www.padippakam.com



இந்திராவையும், நேரடியாக ருஷ்யாவிலும் மறைமுகமாக இந்தியாவிலும் மாபெரும் உயர்ந்த மனிதர்கள் என்று பிரச்சாரம் செய்வதன் மூலம் தங்களை டாடா பிர்லாக் களுக்குத் தாசர்கள் என்று காட்டிக்கொள்ளவில்லையா, இந்த மாஸ்கோ மன்னர்கள்?

இந்நிலையில் இவர்கள் எப்படி இந்தியப் புரட்சி யாளர்களுக்கு உதவுவார்கள்? மாறாக நாளைய தினம் இந்தியாவில் ஒரு புரட்சி நடக்கும்பொழுது இந்தக் கோர்பசேவ் கூட்டம் இந்தியப் பாசிஸ்டுகளின் படையில் அல்லவா அணிவகுத்து நிற்கும்! எனவேதான் இந்திய உழைக்கும் மக்களாகிய நாம் கோர்பசேவ் கூட்டத்தை ஒழித்துக் கட்ட வேண்டிய நிலையில் உள்ளோம்.

மேலே போவோம்.

தோழர்களே! அனைத்துச் சீரழிவுகளையும் சொல்லி அவைகளை நியாயப்படுத்தி எழுதிய ஜெயகாந்தனின் குப்பைத் தொட்டியாக மாஸ்கோ இருப்பது உலகறிந்த உண்மையாகும்.

இன்னொரு அருவருப்பான ஆட்டத்தைப் பாருங்கள்.

> "மாஸ்கோவில் நடைபெற்ற 12-வது இளைஞர் விழாவில் இந்தியர்களின் கலைநிகழ்ச்சிக்குப் பெருத்த வரவேற்பு இருந்தது இந்நிகழ்ச்சிகள் இளைஞர்களுக்கான தியேட்டர்களில் நடை பெற்றன.
>
> "இவ்விழாவில் குமாரி வித்யாசுப்ரமண்யத்தின் பரதநாட்டிய நிகழ்ச்சி வெகுசிறப்பாக நடை பெற்றது."

[தினமணி— 31-8-85]

படிப்பகம்

www.padippakam.com



பாராளுமன்ற பஜனை பாடும் இடது வலது பண்டாரங்களே, பரத நாட்டியம்தான பாட்டாளிவர்க்கக் கலாச் சாரமா?

''சோவியத் ரஷ்யாவில் இம்பாத்பேவ் என்ற ஒரு மாந்திரீகர் சமீபத்தில் கைது செய்யப்பட்டிருக் கிறார்.

' தாம் ஒரு மாந்திரீகர் என்றும், தீராத வியாதி யெல்லாம் தீர்க்க முடியும் என்றும் சொல்லிக் கொண்டு அவர் ருஷ்யா முழுவதும் பயணம் செய்தார். அவரை நம்பிப் பலர் தங்கள் ஆயுள் சேமிப்பையெல்லாம் அவரிடம் கொடுத்ததாகவும் பெண்கள் தங்கள் ஆடைகளைக் களைந்து அவருடன் நீச்சல் குளத்தில் இறங்கியதாகவும் அவர்களுடைய கணவன்மார்கள் கரையில் நின்று பார்த்துக் கொண்டிருந்ததாகவும் ரஷ்யப் பத்திரிகைகள் கூறுகின்றன.

''விஞ்ஞானிகள், அறிஞர்கள் உள்படப் பலர் அவருடைய சீடர்களாகச் சேர்ந்தனர். மாஸ்கோ பத்திரிகையாளர் ஒருவரும் இவர்களுள் அடக்கம். சீடர்களைப் பரிசுத்தப்படுத்துவதற்காகக் காணிக்கை வசூலித்ததாகவும் ஜலக்கிரீடை செய்ததாகவும் அந்தச் சாமியார் கூறினார்.

''அவருடைய செல்வாக்குக்கு உட்பட்ட ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டதை அடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

''இம்பாத்பேவ் ஒரு தூய பிரம்மச்சாரி என்றும் பிரபஞ்ச சக்தியைத் தம்மகத்தே கொண்டவர் என்றும் வாசகர்கள் சிலர் எழுதிய கடிதங்களை யும் பத்திரிக்கைகள் பிரசுரித்திருக்கின்றன.''

[தினமணி—19-9-85]

படிப்பகம்

www.padippakam.com



இப்பொழுது நாம் பார்த்தது அமெரிக்க ரஜனீஷ் சாமியாரின் விவகாரம் என்று நினைத்துவிடாதீர்கள். நம் சோவியத் யூனியனில் நடந்ததுதான், அந்த ரஷ்ய சமூகம் எப்படி நாறிப்போயிருக்கிறது பார்த்தீர்களா? ஆகா...அதான் இந்த சாமி மீது எங்கள் கோர்பசேவ் நடவடிக்கை எடுத்துவிட்டாரே என்று போலிகள் புளுகக் கூடும்.

ஆனால் அதுவும் சரியானதல்ல. ஆபாசப் பேய் ரஜனீசை விரட்டியடித்ததால் அமெரிக்க சமூகத்தையும் அமெரிக்க அரசாங்கத்தையும் உயர்வானது என்று நாம் ஒத்துக்கொள்வோமேயானால் இதையும் நாம் பரிசுத்தம் என்று அங்கீகரிக்கலாம்.

மேலே நாம் பார்த்த செய்தியைத் தொடர்ந்து வரும் செய்தியானது 'சர்வம் சிவமயம்' என்ற பண்டாரங்களின் பாசையைப் போல, ருஷ்யச் சமூகம் முழுமையும் சீழ் பிடித்து வழிகிறது என்பதை நிரூபிக்கிறது. அதைக் கேளுங்கள்.

> ''ஜார்ஜியாவைச் சேர்ந்த 'ஜீனாதாவித் காவிலி' என்ற 40 வயது மாது ஒருத்தியும் பெரிய மாந்திரிகராகக் கருதப்படுகிறார். நீண்ட கருங் கூந்தலும் கூரிய விழிகளும் கொண்ட இந்தப் பெண் தன்னுடைய மந்திர சக்தியால்-வியாதி களைக் குணப்படுத்துகிறாளாம். மாஸ்கோவில் வசித்துவரும் இவளை அரசு அங்கீகரித்து அறிவியல் கழகத்தில் அவளுடைய ஆற்றல்கள் பரிசோதிக்கப்பட்டு வருகிறது. அவளுடைய விரல்களிலிருந்து ஏதோ ஒளிவீசுவதாகச் சொல்லப்படுகிறது. முந்திய சோவியத் அதிபர் பிரஷ்னெவ் உட்படப் பல பெரிய புள்ளிகளுக்கு அவர் சிகிச்சை செய்திருக்கிறார். திட்டக் கமிஷன் தலைவர் பாபிபாக்கோவ் உட்படப்

படிப்பகம்

www.padippakam.com



பல பிரமுகர்கள், இப்போதும் அவளிடம் சிகிச்சை பெறுவதாகச் சொல்லப்படுகிறது''

''கம்யூனிஸ்ட் புரட்சி நடந்து 70 ஆண்களுக்குப் பிறகும், நாத்திகம் ஆஸ்தானக் கோட்பாடாக இருந்துவரும் நிலையிலும் மூடநம்பிக்கை மறு படி தலைதூக்கியிருக்கிறது மேலை நாடுகளில் வியப்பை ஏற்படுத்தியிருக்கிறது.''

தினமணி—19. 9. 85 / ஜூனியர் விகடன் 11-9-85

இன்னும் கேட்போம்.

''ஜோசியம் பார்ப்பது ரஷ்யாவில் சமூக நோயாக மாறிவிட்டது. பலரது வாழ்வையும் அது நாசப் படுத்துகிறது. காப்பிக்கொட்டைகளை சோவி யாகக் கொண்டு குறி'சொல்பவர்களின் ஜோசியப் படி மக்கள் குருட்டுத் தனமாக நடக்கிறார்கள். இப்படி ஒரு விவகாரத்தில் குறிசொல்வதைக் கேட்டு ஒரு பெண் தன் கணவனை விவாரகத்துச் செய்துவிட்டாள். சாராயத்தைப் போல, மனிதனின் மிகச்சிறந்த குணங்களை குறி சொல்வது கெடுக்கிறது. சமூகக் கேடு என்ற வகையில் இரண்டுமே ரஷ்யாவிவ் நிலவுகின்றன. ருஷ்யத் தொழிற்சங்கப் பத்திக்கையான 'ட்ரூடு' தரும் தகவல்கள் இவை.''

[புதிய கலாச்சாரம் — அக்டோபர் 1985]

இதுவரை பிற்போக்கு கோர்பசேவ் கூட்டத்தில் ருஷ்ய சமூகத்தில் மந்திரம், ஜோதிடம் என்ற சுரண்டல் கூட்டத்தின் பிழைப்பிற்கான ஆயுதங்கள் எந்த அளவிற்கு வியாபித்திருக்கின்றன என்பதைப் பார்த்தோம். அடுத்து நாம் பார்க்கப் போவது சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் படைத்தளபதிகள் பஞ்சபாண்டவர்களின் சீடர்களாகப் பரிணமிக்கிற காட்சி.

படிப்பகம்

www.padippakam.com



"மாஸ்கோ நவம்பர் 4—1985. இந்தியக் காப்பியங்களில் ஒன்றான மகாபாரதம் ருஷ்ய மொழியில் இரண்டாவது பதிப்பில் ஒரு லட்சம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டுள்ளன' **இவை குழந்தைகளுக்கான புத்தகங்களாகும்''**

"'நலக்கோடவ்' என்ற ஓவியர் இந்தப் படக் கதைக்கு அழகான சித்திரங்களைத் தீட்டியுள்ளார்."

"இந்தியாவின் கவிஞர்கள், ஓவியங்கள், சிற்பிகள் தங்கள் கைவண்ணத்தில் உருவாக்கிய மஹா பாரத நிகழ்ச்சிகளே இப்புத்தகங்களில் பெரிதும் கையாளப்பட்டுள்ளன."

[தினமணி—8. 11. 85]

தலைவன் எவ்வழியோ அவ்வழியே தொண்டனும் என்பதும் மரபு. அதை மூன்றாவது உலக நாடுகளின் முப்படைத்தளபதி என்று போலிப் புரட்சிகளால் புளுகப் படும கியூபாவின் ஃபிடல் காஸ்ட்ரோ நிரூபணம் செய்கிறார் பாருங்கள்.

"பம்பாய் டிசம்பர் 6-1985 கியூபா நாட்டு அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோவுக்குத் தலைநகர் ஹவானாவில் நடைபெற்ற ஒரு விழாவில் ஆங்கிலத்திலும் பிரஞ்சிலும் மொழிபெயர்க்கப் பட்ட இரண்டு பகவத்கீதைப் பிரதிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

'இந்த உயரிய நூலை நான் மதிக்கிறேன். மிக்க நன்றி. இதை நான் படிப்பேன்' என்று காஸ்ட்ரோ கூறினார்."

"சர்வதேச கிருஷ்ணா ஆன்மீக இயக்கம் (இஸ்கான்) சார்பில் கீதை வழங்கப்பட்டதாக

படிப்பகம்

www.padippakam.com



பம்பாய் அலுவலகத்திற்குத் தகவல் கிடைத்துள்ளது.''

[தினமணி—8. 12. 85]

அடுத்தது,—

ஃபிடல் காஸ்ட்ரோவின் பின்னாலேயே சோஷலிச சொர்க்க புரியான மங்கோலியாவும் வருகிறது.

> ''புது டில்லி 23. 1985. காளிதாசன் எழுதிய மேகதூதம், ராமாயணம், பஞ்சதந்திரம் உட்பட ஏராளமான சமஸ்கிருத, ஹிந்திப் படைப்புகள் மங்கோலிய மொழியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. மங்கோலியாவின் தலைநகரான உலான் பாடரில் உள்ள அவரது நூலகத்தில் இவை வைக்கப்பட்டுள்ளன. அங்கு சமஸ்கிருத ஆயுர்வேத சாஸ்திரம் மொழிபெயர்க்கப்பட்டு 226 புத்தகங்கள் உள்ளன. மங்கோலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே நூற்றுக் கணக்கான ஆண்டுகளாகக் கலாச்சார உறவு இருப்பதாக இந்தியாவிற்கான மங்கோலியத் தூதர் 'யுனிவாஸ் ஃபயர்' தெரிவித்தார்.''

[தினமணி—24. 12. 85]

நவம்பர் புரட்சியைக் கண்ட ரஷ்யா, அக்டோபர் புரட்சியைக் கண்ட மாஸ்கோ, லெனினாலும் ஸ்டாலினாலும் கட்டப்பட்ட சோவியத் சோசலிச உலகம் இந்த அளவிற்குச் சீரழிந்திருக்கிறதே, நம்பக்கூட முடியவில்லையே என்று வருத்தமும் ஏமாற்றமும் அடைகிறீர்களா!

கூவும் குயில்களை விரட்டிவிட்டுக் கோட்டான்கள் குடியேறி விட்டதே சோவியத் ஆட்சியில். அடுத்து 'ஹரே கிருஷ்ணா இயக்கம், யோகாப்பியாசம் ஆகியவற்றில்

படிப்பகம்

www.padippakam.com



கலந்து கொண்டதாக சோவியத் யூனியனில் 30 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டிருப்பதாக 4. 1. 86 தினமணி சொல்கிறது. அதே நேரத்தில்,

> "இந்தியவிண்வெளி வீரரான யோகேஸ் சர்மா வைத் தூக்கிச் சென்ற விண்வெளிக் கலத்தில் யோகேஸ்சர்மா செய்து காட்டிய யோகாசனப் பயிற்சிகளைக் கோர்பசேவ் கூட்டம் T. V. மூலமும், இதர விளம்பர—தகவல் தொடர்பு சாதனங்கள் மூலமும் ருஷ்ய மக்கள் அனைவருக்கும் காட்டியதையும் நாம் மறந்துவிடக் கூடாது."

இப்படி மாஸ்கோ மன்னர்கள் நிலவுடைமைக் காலத்துக் குப்பைகளைத் தலையில் தூக்கிக் கொண்டு ஆடுவதன் விளைவுதான் என்னவோ?

> "இந்திய இடதுகளின் தலைவரான நம்பூதிரி ராமாயணத்தை மக்கள் இலக்கியம் என்று பிரச்சாரம் செய்து கொண்டு திருவனந்த புரத்து பத்மநாப சாமியின் கால்களில் கட்டுண்டு கிடக்கிறார் போலும்."

[கரிச்சான் குஞ்சு—விடிவு / செந்தூரன் - செந்தாரகை]

அடுத்து கோர்பசேவ் கூட்டத்தின் சினிமாப் புரட்சியைப் பார்ப்போம். சினிமாவில் எங்கள் சோஷலிச சொர்க்கலோகம் மக்களுக்கான சினிமாக்களை உற்பத்தி செய்கிறது, மக்களின் விஞ்ஞான மனோபாவத்தை வளர்க்கக் கூடிய வகையில் சோவியத் படங்கள் அமைகின்றன; மூன்றாவது உலக நாட்டு மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் படங்களையும் அவர்களின் விடுதலைக்கு வழிசொல்லும் படங்களையும் எங்கள் சோவியத் அரசர்கள் ஆதரித்தே வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட

www.padippakam.com



ஒரு நிலையில்தான் 'தண்ணீர் தண்ணீர்' திரைப்படத்தை மாஸ்கோவிற்குத் தள்ளிக் கொண்டு போனார்கள் இப்படிப்பட்ட ஒரு பாட்டாளிவர்க்கக் கண்ணோட்டத்தில் தான் ஜோதிபாசுவின் ஏவல் 'மிருனாள் சென்'க்குத் தங்க மயிலாகத் தள்ளிவிடுகிறார்கள் என்று இடது வலது நாயகர்கள் நகைத்துத் திரிவதையும் நாம் பார்க்கிறோம்.

இப்படி நம் நாட்டுப் போலிகள் புளுகித் திரிவதானது கோர்பசேவ் கூட்டத்தை உயர்த்திப்பிடிப்பதற்கேயன்றி வேறு எதற்காகவாம்! இந்திய சினிமா என்கிற சாக்கடை உலகத்தைப் போலவே ரஷ்யாவும் சினிமாவில் ஆபாசப் புரட்சி செய்து வருகிறது.

> ''இந்திய சினிமாக்களை ரஷ்யர்கள் ஏராளமாக ரசிக்கிறார்கள் என்று புரட்சி முழக்கமிடுகிறான் ஒரு ரஷ்ய அதிகாரி.''
>
> [தினமணி—28. 8. 84]

கேவலங்கள் தொடர்கின்றன.

> ''இந்தியாவில் 'ஏ' சர்டிபிகேட் கொடுக்கப்பட்ட மேல்தட்டு வர்க்கத்தினர் மட்டுமே பார்க்கக் கூடிய ஆபாசக் குப்பைகளைக் கீழைய நாடுகளைச் சேர்ந்த சோஷலிசக் குடும்பத்தில் உள்ளவர்கள் விலைகொடுத்து வாங்குகிறார்கள்.'
>
> [தினமணி—13. 2. 85]

இந்தித் திரைப்பட உலகின் புகழ்பெற்ற கோமாளியும் பாசிச இந்திரா கும்பலின் பாராளுமன்றப் பன்றியுமான 'அமிதாபச்சன்' 'நான் இங்கு ஒரு கலாச்சார நிகழ்ச்சி நடத்தப் போகிறேன். அதில் நான் நடித்த படங்களும் இடம்பெறும்' என்று மாஸ்கோவில் கத்தியதை 10. 7. 85 தினகரன் கூறுகிறது,

படிப்பகம்

www.padippakam.com



அட போலிகளே! அமிதாபச்சன் என்ன மார்க்சிய அழகியலையும் மக்களுக்கான கலைவடிவங்களையும் மாஸ்கோவில் அரங்கேற்றப் போகிறானா? இல்லை அது பற்றி ஏதாவது இவனுக்குத் தெரியுமா என்ன?

பாபி, டிஸ்கோ டான்சர், சாகுந்தலம் முதலான ஆபாசக் குப்பைகளையெல்லாம், ருஷ்யாவின் மூலை முடுக்குகளில் எல்லாம் அள்ளித் தெளித்தார்கள்-மாஸ்கோ மைனர்கள். 'போனி M' டிஸ்கோ முதலான ஏகாதிபத்திய எச்சில்களையும் வீசியெறிந்தது இந்தக் கூட்டம்

> ''மாஸ்கோ. நவம்பர் 7 - ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் முதன் முதலாக இப்போதுதான் ஒரு வீடியோ கடை திறந்திருக்கிறார்கள். இத் தகவலை இளைஞர் சங்கச் செய்தித்தாள் தெரிவிக்கிறது
>
> ''கடைதிறந்த அன்று பெரும்பாலும் இளைஞர் களே இருந்த பெரிய வரிசை ஒன்று கடை முன்பு நின்று கொண்டிருந்தது.
>
> ''ஏதாவது வீடியோ படம் போட்டுக் காட் டினால் அதைப் பார்ப்பதற்காகவும் கூடி நின்றனர்.
>
> ''அந்தக் கடையில் 340 கேசட்டுகள் பதிவு செய்யப்பட்ட நிலையில் இருந்தன. அவற்றில் **பல திரைப்படங்கள் முதலாளித்துவ நாடுகளில் எடுக்கப் பட்டு வெளியானவை.'**
>
> [தினமணி—10. 11. 86]

'ஈநாட்டின்' இயக்குனர்களான இடது வலது போலி களே, இந்த அசிங்கங்களை எல்லாம் உங்கள் பிடியில் சிக்கியிருக்கும் புரட்சிகரப் பாட்டாளிகளிடம் நீங்கள்

படிப்பகம்

www.padippakam.com



காட்டியது உண்டா? உங்களால் எப்படி முடியும்? மன்னர்களின் சேவையை விட உங்களுக்கு மக்கள் சேவையா பெரிது?

மேலே போவோம்.

> " 'டல்லாஸ்' எனும் அமெரிக்க ஏகாதிபத்தியக் குப்பையை மேற்கு ஜெர்மனியின் T. V. - யில் ஒலி பரப்பும்போது அது கிழக்கு ஜெர்மனியிலும் தெரிவதால் அங்கும் அதற்கு ஏராளமான ரசிகர்களாம்."
>
> [தினமணி—14-11-85]

நிலவுடைமைக் காலத்தில் பண்ணையடிமைகள் ஒடுக்கப்பட்டதாகவும் சுரண்டப்பட்டதாகவும் மார்க்சீயம் நமக்குச் சொல்லுகிறது. அதுவே உண்மையுமாகும்.

ஆனால் புரட்டல்வாதப் புரட்சி நடத்திக் கொண்டிருக்கும் கோர்பசேவ் கூட்டத்தின் அறிவுக்கொழுந்து நாரஜோவ் என்பவன்,

> "சிந்து சமவெளி நாகரிகத்தின் மக்களின் பொருளாதார நிலை நன்றாக இருந்தது. இதுவரை வேறெந்த நாகரிகத்திலும் காணப்படாத அளவு வடிகால் வசதி இருந்துள்ளது. நகரில் குளங்கள், வெந்நீரில் குளிப்பதற்கான வசதிகள், வீடு தோறும் குளியலறைகள் இருந்தன."
>
> [தினமணி—14-10-1985]

என்று பண்ணையடிமைகளும் பளிங்கு மாளிகையில் வாழ்ந்ததாக வரலாற்றைத் திரிப்பதின் மூலம் அசோகன் காலம் பொற்காலம், குப்தர் காலம் கொடிகட்டிப் பறந்த காலம் என்று பொய்ப்பிரச்சாரம் செய்யும் இந்திய ஆளும் கூட்டத்துக்குத் துணை போகிறான்,

படிப்பகம்

www.padippakam.com



அதிக்ம் குடிப்பதில் ரஷ்யக்காலனிகளான ஹங்கேரி யும், கிழக்கு ஜெர்மனியும் 6, 9-வது இடங்களைக் கைப் பற்றியிருப்பதாகச் சர்வதேசப் புள்ளிவிபரம் ஒன்றி லிருந்து 29-4-85 தினமணி சொல்கிறது. இந்த மதுவகை குறிப்பிடத்தக்கது.

உலகிலேயே ஹங்கேரியில் தான் தற்கொலை செய்து கொள்பவர்களின் சதவிகிதம் அதிகமாக இருக்கிறது என்று தென்கொரியாவைச் சேர்ந்த 'சிம்போங்ஹை' என்ற பேராசிரியர் கூறுகிறார்.

புரட்டல் வாதிகளால் சோஷலிசப் பிரச்சாரத்தில் மூழ்கடிக்கப்பட்டிருக்கும் ஹங்கேரியின் லட்சணம் பார்த் தீரா? இதைக்கூட ஏகாதிபத்தியத் தென்கொரியாவின் பொய்ப்பிரச்சாரம் என்று போலிகள் புரட்டிவிடக் கூடும்.

மேலே போவோம்.

> ''1954-ல் ருஷ்யாவில் நடைபெற்ற திருமணங் களில் 3000க்கு 30 திருமணங்கள் விவாகரத்தில் முடிந்தன. ஆனால் 60 களின் இறுதியிலோ 100க்கு 30 திருமணங்கள் விவாகரத்தில் முடிந் துளளன!''
>
> [சுனில் பாவார்—கட்டுரை]

இது இன்றைய நிலையில் மிகவும் அதிகரித்துவிட்டது என்பதைப் பின்வரும் தகவல் ஊர்ஜிதம் செய்கிறது.

> ''முன்னாள் ஒலிப்ரப்புத் துறையின் டைரக்டர் டி. எஸ். மேத்தா என்பவர் 'இந்தியா பார்வை யில் ரஷ்யா' என்ற நூலை வெளியிட்டிருக்கிறார்' அதில் ரஷ்யாவில் ஆண்டுக்கு 10 லட்சம் மண முறிவுகள் நிகழ்கின்றன எனக் குறிபபிடுகிறார்,
>
> [தினமணி—25-9-85]

படிப்பகம்

www.padippakam.com



அடுத்து, மாஸ்கோ மன்னர்களை எதிர்ப்பவர்களை ஒடுக்குவதற்காகவே மனநோய் முகாம் என்ற பெயரில் ஒடுக்குமுறைக் கூடங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட முகாம்களானது உண்மையிலேயே மன நோயாளிகளைக் குணப்படுத்திச் சோஷலிச பூங்காவில் உலவ விடுவதே.

எண்ணற்ற அப்பாவிகளையும், ஏழைகளையும் கல்கத்தாவின் 'டம்டம்' சிறைக் கொட்டடிகளில் நிர்வாணக் கைதிகளாக அடைத்து உணவும், உடையு மின்றி உலக வியாதிகளையெல்லாம் அவர்கள்மீது 'ஏற்றி விட்டு', பாசிஸ்டுகளும் பாராட்டக்கூடிய வகையில் அவர் களைப் பாடையில் ஏற்றிக்கொண்டு இடதுசாரி சோஷ லிசம் பேசி ஏய்த்துப் பிழைக்கும் புவி மண்டலத்தின் மாபாவிகளான போலிச் சிவப்புகள் ஊளையிடக்கூடும். ஆனால் அது உண்மையல்ல.

மனநோயின் பிறப்பிடம் சோசலிச உலகம் அல்லவே! இந்நிலையில் முகாம்கள் அமைக்கக்கூடிய அளவிற்கு எப்படி சோசலிசப் பூ பூத்தது?

'அங்கே புரட்சிக்கு முந்திய காலத்தின் எச்சங்கள் எஞ்சியிருக்கின்றன. விழுமியங்கள் வீற்றிருக்கின்றன, மலங்கள் கொட்டியிருக்கின்றன' என்று போலிகள் புலம் பினால் கூட, ஸ்டாலினுக்குப் பின்வந்த இவர்கள அவை களை ஒழித்துக்கட்டவில்லையா! அப்படியானால் தாங்கள் சோசலிசக் காலம் முடிந்து கம்யூனிசத்தில் காலடி வைத்துவிட்டதாக 'ஆந்திரப்பாவ்' புளுகினானே, அது எப்படி?

[பார்க்க—ஆந்திரபோவ் சொற்பொழிவுகள் கட்டுரைகள்-மாஸ்கோ வெளியீடு]

இறுதியாக, தோழர்கள் லெனின் மற்றும் ஸ்டாலின் தலைமையில் சோவியத் மக்கள் பெற்ற சோஷலிச வெற்றி

படிப்பகம்

www.padippakam.com



களையெல்லாம், குழிபறிப்பு வேலையின் மூலம் அதிகாரந் தைக் கைப்பற்றிய குருஷேவ் பிரஷ்னெவ் கும்பலானது சீர்குலைத்தது.

இன்றைய சீனத்தலைமைக்கு வழிகாட்டியாய் முதலாளியத்தை மீட்டமைத்து எப்படி முதலாளியம் படிப்படியாக வளர்ச்சியடைந்ததோ, அதற்கு இணை யாக சோஷலிசக் கலாச்சார வடிவங்கள் வீழ்ச்சியடையத் தொடங்கின. பிற்போக்கு முதலாளிய, நிலவுடைமைக் கலாசார வடிவங்கள் செழித்தோங்கின.

இச்சூழலில் மாஸ்கோ மன்னர்கள் மேலும் மேலும் ஏகாதிபத்தியப் பாதையில் போய்க் கொண்டிருப்பதால் அதற்கு இணைவான கலாச்சாரக் கூறுகள் தேவைப்படு கின்றன.

எனவேதான் டாட்டா, பிர்லா, வாண்டையார், மூப்பனார்களை வாழவைக்கும் காந்தியும், நேருவும், கண்ணனும் ராதையும் ரஷ்யாவிற்கு இறக்குமதி செய்யப் படுகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# 9. மார்க்சிய லெனினியத்திற்கு பிரஷ்னெவ் கும்பலின் துரோகம்

முன் பகுதிவரை நாம் பார்த்த அனைத்து விஷயங்களுமே மார்க்சிய லெனினியத்திற்கு மாஸ்கோ மன்னர்கள் செய்த துரோகக் கதைதான் இருப்பினும் பிரஷ்னெவ் கூட்டம் மார்க்சிய லெனினியத்தின்மீது நேரடியாகத் தொடுத்து வரும் தாக்குதல்களை இங்கு பரிசீலிப்போம்.

முதலாவதாக, சர்வதேசப் பாட்டாளிவர்க்கப் படைத் தளபதியும், காலனிய மக்களின் விடுதலைப் போராட்ட வீரனுமான தோழர் ஸ்டாலினையும் போல்ஷ்விக் கட்சியையும் குருசேவ் தூக்கியெறிந்து, அனைத்து மக்களின் அரசு, சமாதான சமூக மாற்றம், சமாதான சகவாழ்வு முதலான குப்பை கூளங்களின் மீது சோவியத் யூனியனை வழிநடத்தினான்.

அவனைத் தொடர்ந்து வந்த பிரஷ்னேவோ அவனுக்கு மேலே சென்று விட்டான். பாசிச இந்திராவால் கட்டவிழ்த்து விடப்பட்ட அவசர நிலைப் பிரகடனத்தை ஆதரித்தது பிரஷ்னெவ் கூட்டம். பாசிச இந்திராவை ஆதரிக்க வேண்டும் என்று போலிச் சிவப்புக்கு போதனை செய்ததையும் நாமறிவோம்.

கண்டகண்ட குப்பைக் கூளங்களை எல்லாம் சர்வதேசச் சந்தையில் அள்ளிவிடுகிற கோர்பசேவ் கூட்டம், தோழர் ஸ்டாலினின் நூல்களை இருட்டடிப்புச் செய்

படிப்பகம்

www.padippakam.com



வதின் மூலமாகவும் தங்களை மார்க்சிய விரோதிகளாகக் காட்டிக் கொள்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக உலகெங்கும் படர்ந்திருக்கும் பாசிசக் கள்ளிகளும் புரட்டல்வாதப் பேய்களுமான பாராளுமன்றப் பன்றிகளுடன் பந்தியில் அமருகிறது. அந்த வகையில் இங்கே இடது வலதுகளைச் சொல்லலாம்.

இப்படிச் செய்வதின் மூலம் மார்க்சிய லெனினியத்தின் புரட்சிகர உள்ளடக்கத்தைப் பிணக்குழியில் தள்ளிவிட்டு, சட்டவாதச் சண்டாளர்களை அங்கீகரிக்கிறது பிரஷ்னெவ் கூட்டம். அடுத்து,

1970களின் மத்தியிலேயே இன்றைய சீனத்தலைமைக்கு வழிகாட்டியாக, மாஸ்கோ மன்னர்கள் தோழர் லெனினையும் லெனினியத்தையும் தூக்கியெறிந்தார்கள்.

> ''லெனின் வர்க்கக் கோட்பாடுகளைப் புறக்கணித்தார். பிற்போக்குத் தனமான உலக அரசியலை போதித்தார்'' என்று எழுதியது பிரஷ்னெவ் கூட்டம்.
>
> [சர்வதேசப் பிரச்சனைகள் என்ற சோவியத் சஞ்சிகையிலிருந்து மேற்கோள் No. 6-1974 மூன்றுவகை வகைப்படுத்தும் தத்துவம், பீகிங் வெளியீடு—தமிழ் மொழி பெயர்ப்பு].

எப்படி? அடுத்து, இன்றைய சீனத்தின் பெருங்கும்பலோடு கூடிக் குலாவுவதில் ஆனந்தம் அடைகிறது கோர்பசேவ் கூட்டம்.

டெங் கும்பலோ தாங்கள் முதலாளிய சக்திகளே என்பதை அனுதினமும் பிரச்சாரம் செய்துகொண்டே இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளிலும் சோயூஸ் வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



1. சோவியத் யூனியனும் இந்தியாவும்-கொடுங்கரடியின் பிடி இறுகுகிறது—KALAM—VOL—III No. 5.

2. இந்தியாவில் சோவியத் சுரண்டல்— பரிமாணம் வெளியீடு.

3. 'சமரன் ஜூலை-84.

சாராம்சமாக, பிரஷ்னெவ் வாதிகளின் வாணிப மானது பொதுவாகப் போலி நம்பிக்கை யூட்டுதல், ஏமாற்றுதல், குறைந்த விலை கொடுத்து 3-வது உலக நாடுகளைக் கொள்ளை அடித்தல், அதிக விலைக்குப் பொருள்களை அவர்கள் தலையில் கட்டுதல்-என ஒரு ஏகாதிபத்தியப் பொருளாதார இயக்கப் போக்கில்தான் நடைபெறுகிறது.

சர்வதேச அளவிலும், மூன்றாம் உலக நாடுகளிலும் ரஷ்யக் கரடியின் வாணிபக் கொள்ளைகளை இங்கு ஒரு சில சோற்றுப் பருக்கைகளாகத் தான் கொடுத்துள்ளோம். மறைந்து கிடப்பது மலையளவு. ஆனால் இங்கேயுள்ள வலது இடது திரிபுவாதத் துரோகிகள் மூன்றாவது உலக நாடுகளை ஏகாதிபத்தியப் பொருளாதார ஆதிக்கத்தி லிருந்து விடுவிக்கப் போராட வேண்டும் எனப் பூச்சாண்டி காட்டுவது கூலிக்கு மாரடிப்பதேயன்றி வேறென்ன?

படிப்பகம்

www.padippakam.com

# 3. இந்தியாவில் மாஸ்கோவாதிகளின் ஆதிக்கம்

மாஸ்கோவாதிகளின் அயலுறவுக் கொள்கையானது ஸ்டாலினும் லெனினும் காட்டிய வழியில் தான் உள்ளதாம். இப்படித்தான் போலிகள் புளுகுகிறார்கள்.

[பார்க்க—அருண்சோரியின் அவதூறுக்குப் பதில்.]

ஸ்டாலின் காலத்தில் அயலுறவுக் கொள்கையானது. சரியாக இருந்தது. முதன் முதலாக இந்தியாவிற்கும் சோஷலிச சோவியத் யூனியனுக்கும் ஏற்பட்ட தொழில் துறை ஒப்பந்தமானது பிலாய், பொக்காரோ உருக்காலைகளாகும்.

> ''இவ் ஒப்பந்தம் சர்வதேச அளவில் நோக்குகையில் மிகக் குறைந்த விலையில் 2.5% வட்டி விகிதத்தில் 12 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த கூடிய வகையில் கட்டுமானப் பணியில் கால தாமதம் ஏற்பட்டால் காலதாமதமாகக் கடனைச் செலுத்தலாம் — என்ற நியாயத்துடனும், அன்றைய நிலையில் இருந்த நவீனத் தொழில் நுட்பத்தைப் பிரயோகித்துக் கட்டவேண்டும் என்ற அடிப்படையில் ஒத்துக்கொள்ளப் பட்டது.''
>
> ''இவ்வொப்பந்தமானது தோழர் ஸ்டாலின் காலத்தில் அரைக்காலனிய நாடுகளை ஏகாதி

படிப்பகம்

www.padippakam.com



இவ்வாறு தலைவர்கள் பந்தியில் உட்காரும்போது பரதேசிகள் படையெடுக்காமல் இருப்பார்களா, என்ன? எடுத்தார்களே!

முதலாவதாக இந்திய இடதுகள். 15-5-85 அன்று இடதுகளின் பொலிட்பீரோ உறுப்பினர் V. சங்கரன் அச்சுதாநந்தன் தலைமையில் தூதுக்குழு ஒன்று டெங் கூட்டத்தைக் காணப் பீகிங் ஓடியதாகச் சொல்கிறது.

இப்படி, பொறுக்க ஓடிய புரட்டல்வாதிகளின் முழக்கம் ஒலிக்கிறது கேளுங்கள்.

> *''1983க்குப் பிறகு சீனாவின் உறவில் ஏற்பட்ட உறவு குறித்துத் திருப்தி அடைகிறோம்.''*

*[தினமணி—16-5-85]*

இடதுசாரி என்று ஏழைகளை ஏய்த்து வலதுசாரிகளுக்கு வால்பிடித்து வாழ்க்கை நடத்தும் இடது போலிகளே, மார்க்சிய-லெனினிய-மாவோயிச விரோதிகளான சீனச் சிவப்புகளைச் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் மத்தியில் அம்பலப்படுத்தாமல் அவர்களிடம் அடைக்கலம் புகுந்துவிடுகிறீர்களே! உங்களுக்கும், விபசாரத்திற்குத் துணை போகும் மாமாக்களுக்கும் ஏதாவது வித்தியாசம் இருப்பதாக உங்களுக்குத் தெரிகிறதா? தம்பி இவனைப் பார்த்து விட்டானே, விடுவானா அண்ணன்? அவனும் ஓடினான்.

> ''ஜூன் 26 அன்று AITUC தலைவர் C. மிஸ்ரா M.P தலைமையில் தூதுக் குழு ஒன்று சீனாவுக்குச் சென்றது.''

*[தினமணி—28-5-85]*

www.padippakam.com


மீண்டும் சங்கமிக்கிறார்கள்.

> ''ஜனவரி 1-ஆம் தேதி பம்பாயில் நடந்த கதர்க் குல்லாய்களின் மாநாட்டுக்கு வந்த 6 பேர் அடங்கிய சீனக்குழுவினர் M.M. பரூக்கி, A.B. பர்தன், C. மிஸ்ரா முதலான வலதுகளுடன் ஆலோசனை நடத்தியதாகச் சொல்கிறது''
>
> [தினமணி—3-1-85]

காங்கிரஸ் நூற்றாண்டுக்கு வந்தார்களாம் சீனச் சிவப்புகள்.

வலது போலிகளே! சீனப்புரட்சிப் போராளிகளையும் தோழர் மாவோ சே துங்கையும் சீர்குலைவுவாதிகள் மார்க்சிய-லெனினிய விரோதிகள் என்றும் லட்சக்கணக்கான உழைக்கும் மக்களின் உதிரத்தால் சிவந்துபோன அந்த மக்கள் சீனத்தை ஏகாதிபத்தியத்தின் ஏவுதளம் என்றும் நீங்கள் பிரஷ்னெவ் கும்பலோடு சேர்ந்து ஊளையிடவில்லையா? அதை 'சீனப் புரட்சியும் மாவோயிசமும்' என்ற காகிதக் குப்பையின் மூலம் 'மொகித் சென்' வெளிப் படுத்த வில்லையா?

இவ்வளவும் செய்துவிட்டு,இன்றைய தினம் மாஸ்கோ மன்னர்களின் பாதச் சுவடுகளைப் பற்றி ஓடியிருக்கிறீர் களே! இந்நிலையில் உங்களை மாஸ்கோ மன்னர்களின் மாட்டப்பட்டிருக்கும் காலணி என்று சொன்னால் அதில் என்ன தவறு, யோசியுங்களேன்...

மூலதனத்தின் கோரச் சுரண்டலிலிருந்தும், நிலவுடைமையின் ஒடுக்கு முறையிலிருந்தும் ஏகாதிபத்திய ஆதிக்க நுகத்தடியிலிருந்தும் மனித குலத்தை விடுதலை செய்வதற்காக சர்வ வல்லமை படைத்த மார்க்சிய-லெனினிய ஜோதியைக் கையிலேந்தித் தங்களை அறியாமலேயே

படிப்பகம்

www.padippakam.com



வலது, இடதுகளின் தூண்டில் மீனாய்ச் சிக்கியிருக்கும் எமதருமைப் புரட்சிப் போராளிகளே! நாம் இங்கு ஒரு விஷயத்தை ஆழமாக நினைவில் கொள்ள வேண்டும்.

அதாவது ஸ்டாலினையும், போல்ஷ்விக் கட்சியையும் சோஷலிச அமைப்பையும் குருசேவ்+பிரஷ்னெவ் கும்பல் தாக்கத் தொடங்கியவுடனேயே, தோழர் மாவோ அவர்கள், மாஸ்கோ மன்னர்களை 'சமூக ஏகாதிபத்திய வாதிகள்' என்று சர்வதேசப் பாட்டாளிவர்க்கத்தின் மத்தியில் அம்பலப்படுத்தியதும், பிரஷ்னெவ் கூட்டம் மாவோவையும் சீனாவையும் அவதூறாகப் பிரச்சாரம் செய்தது.

அதே நேரத்தில், இன்றைய தினம் பீகிங்கின் இளவரசர்களான டெங் கும்பல், கட்சி மற்றும் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றி மாஸ்கோ மன்னர்களைப் போலவே மக்கள் சீனத்தில் சோஷலிசத்தைச் சுடுகாட்டில் வைத்துவிட்டு முதலாளியக் கோட்டையாக மக்கள் சீனத்தை மாற்றத் தொடங்கியவுடனே, பிரஷ்னெவ் கூட்டம் டெங் கும்பலை சோஷலிஸ்டுகள் என்று சொல்லிக் கொண்டு சொந்தம் கொண்டாடுகிறது!

சீனாவானது இன்றைய தினம் மாஸ்கோவைவிட வேகமாக முதலாளியப் பாதையில் போய்க்கொண்டிருக் கிறது. ஏகாதிபத்தியங்களுக்குத் தொண்டூழியம் செய்யும் 'அன்னை தெரசா' என்ற மூதாட்டியை சீனா அழைத் துள்ளதாகச் சொல்லுகிறது 25-8-85 தினமணி.

மின்சாரப் பூனை ஒன்றை ஒரு தொழிலாளி கண்டு பிடித்து அதை விற்று 7000 டாலரை சில மாதங்களிலேயே சம்பாதித்து விட்டார் என்று அவரைப் பாராட்டி 'மக்கள் தினசரி' செய்தி வெளியிடுவதாக, அதாவது தனிச்சொத் துரிமைக்கான உலகம் அமைப்பதாக 25-5-85 தினமணி சொல்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



மேலே போவோம்.

பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையில் இந்தியாவில் அரசு மட்டத்திலும், தனியார் மட்டத்திலும் தொழில்கள் துவங்கச் சீனா ஆர்வமாக உள்ளது என்று சீனத் தூதர் பேசியதை 8-9-85 தினமணி எழுதியது.

> "எல்லாவற்றிற்கும் மேலாகச் சீனாவின் புரட்சியில் மாவோவுடன் தோள்கொடுத்து நின்ற சூயன் லாய் மனைவியும் பதவியை ராஜினாமா செய்து விட்டதாக இதில் சொல்கிறது."
>
> [தினமணி—18-9-85]
>
> "இவை எல்லாவற்றையும் பார்த்து விட்டுத்தான் ராஜீவும், ரஷ்யாவும் சீனாவும் கூட அவற்றின் கொள்கைகளை மறுபரிசீலனை செய்கின்றன. இவ்வாறு செய்வதால் அவை முதலாளித்துவ நாடுகள் ஆகிவிடவில்லை."
>
> [தினமணி—10-11-85]

இவைகளையெல்லாம் புரட்டல்வாதப் போலிகள் சொல்லமாட்டார்கள். ஏனென்றால் வயிறு காய்ந்து விடுமே! அடுத்ததைப் பார்ப்போம்.

படிப்பகம்

www.padippakam.com

# 10. ஏகாதிபத்தியத்துடன் சோரம் போகும் சமூக ஏகாபத்தியம்

தலைப்பைப் பார்த்தவுடன், 'மாஸ்கோ வாசிங்டனுடன் கூட்டுச் சேருகிறதா? அப்படியானால் இருவரும் எதிரிகள் இல்லையா? நண்பர்களா? இவர்கள் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் பிரச்சாரம் செய்து கொள்கிறார்களே! அது ஏன்?' என்ற கேள்விகள் நம் மனதில் எழுவது இயல்பே.

உண்மையாகவே இருவரும் கீரியும் பாம்புமாகத்தான் இருக்கிறார்கள். இருப்பினும் தங்கள் இருவரையும் பாதிக்கின்ற பொதுவான விஷயங்களில் ஒன்றுபட்டு எதிர்த்துச் சமர்புரிகிறார்கள் என்பதும் உண்மையே. உலக யுத்தங்களின் போது ஏகாதிபத்தியவாதிகளிடையே எவ்வளவு முரண்பாடுகள் இருந்தபோதும் சோஷலிச சோவியத் யூனியனை ஒழித்துக்கட்ட அனைவரும் ஒன்றுபட்டிருந்ததைப் போல, இந்தியாவில் அவசரநிலை காலத்தில் தங்களிடையே எவ்வளவு முரண்பாடுகள் இருந்தபோதும் எதிர்க்கட்சி ஓட்டுப் பொறுக்கிகள் அனைவரும் அணி சேர்ந்து பாசிச இந்திராவை எதிர்த்தது போல— சமீபத்திலே தோழர் இன்குலாப் எழுதிய ராஜ ராஜனைப்பற்றிய கவிதையைப் பாடத்திட்டத்திலிருந்து நீக்குவதற்கு தி.மு.காவும், அதி. மு.காவும் ஒன்றுபட்டு இயங்கியதைப் போல—மாஸ்கோவும் வாசிங்டனும்

படிப்பகம்

www.padippakam.com



அணிசேருகின்றன. வாசிங்டனையும் மாஸ்கோவையும் எதிர்த்துப் போராடிக் கொண்டும் அம்பலப்படுத்திக் கொண்டும் இருக்கும் நக்சல்பாரி வழிவந்த புரட்சியாளர் களை இங்குள்ள மாஸ்கோ மன்னர்களின் அடிமைகளான ஜோதிபாசு கூட்டமும் சரி, அமெரிக்க ஏகாதிபத்திய அடிவருடிக் கூட்டமான சோ, அருண்சோரி கூட்ட மானாலும் சரி, ஒட்டுமொத்தமாகச் சேர்ந்துகொண்டு அவர்களைத் ''தீதீதீ...விரவாதிகள், பயங்கரவாதிகள், அணுகுண்டுகளை வீசுவார்கள், மக்களை அச்சுறுத்து வார்கள், கலகக்காரர்கள்'' என்றெல்லாம் பொய்ப் பிரச்சாரம் செய்வதை நாம் பார்க்க முடிகிறது.

அமெரிக்க ஆதரவு மதவெறிக் கட்சியான பாரதீய ஜனதாவின் பொதுச்செயலர் L K அத்வானி ஏப்ரல் 28, 1985 அமிர்தசரசில் ஊளையிடுகிறான்.

> ''மேற்கு வங்க மாநிலத்தில் நச்சல்பாரிகளின் வன்முறை நடவடிக்கைகளால் மார்க்சிஸ்ட் கட்சி யினர் பெரும் தொல்லைக்கு உள்ளாயினர். இருப் பினும் நக்சலைட்டுகளை மார்க்சிஸ்டுகள் உறுதி யுடன் சமாளித்து வெற்றி கண்டனர். அகாலி தளம் மார்சிஸ்ட்டுகளிடம் பாடம் கற்க வேண்டும்.''

[தினமணி—30-4-85]

ரீகனையும் கோர்பசேவையும் எதிர்த்துப்போராடும் நக்சல்பாரிகளின் விசயத்தில் இருவரின் அடிவருடிகளும் எப்படி சங்கமிக்கிறார்கள், பார்த்தீர்களா?

அடுத்து, மேற்காசியப் பிரச்சனைபற்றி, அதாவது இஸ்ரேல், பாலஸ்தீன விவகாரம் பற்றி மாஸ்கோவும் வாசிங்டனும் சேர்ந்து 19-2-85, 29-2-85 தேதிகளில் ஆஸ்டிரியாவின் தலைநகர் வியன்னாவில் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அதுபற்றிய விபரம் எதுவும் வெளியிடப் படவில்லை,

படிப்பகம்

www.padippakam.com



ஏன் வெளியிடப்படவில்லை என்று நீங்கள் கேட்கா தீர்கள். இருவரும் ரகசியமாக உலகத்தைப் பாதுகாக்கி றார்கள். அதைப்போலவே சமீபத்தில் கோர்பசேவும் ரீகனும் ஜெனிவாவில் கூடிப் பேசி, சிரித்து, மகிழ்ந்து உலக மக்களின் மீது இருவரும் அணுகுண்டு போடமாட்டோம் என்றெல்லாம் புலம்பினார்கள். நமது போலிகளும் புளகாங்கிதம் அடைந்துபோனது.

அந்த ஜெனிவா சந்திப்பைப் பற்றி அமெரிக்க சனாதிபதி ரொனால்டு ரீகன்,

> "நாங்கள் சரியான பாதையில் சென்று கொண்டி ருக்கிறோம் என்பதை நான் இங்கு உறுதி செய்து கொண்டேன். ஜெனிவா உச்சி மகாநாட்டில் நடந்தது பற்றிய உண்மை அறிக்கை பலமாதங் களுக்கு, ஏன் பல ஆண்டுகளுக்குக் கூடவெளி வராது".

[தினமணி—22-11-85]

எப்படி? ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்று சொல்வார்கள். அதைப்போல இரண்டு பாசிஸ்டுகளும் எப்படி உலக மக்களின் தலையில் மிளகாய் அறைக்கிறார்கள் பாருங்கள்.

ஏ! நயவஞ்சக நரிகளான ஓட்டுச் சீட்டுகளே! ஜெனிவா உச்சி மகாநாட்டில் நடந்ததுபற்றிய உண்மை அறிக்கை பலமாதங்களுக்கு ஏன் பல ஆண்டுகளுக்குக் கூட வெளிவராது என்று ரீகன் சொல்கிறானே! இது உங்கள் காதுகளில் விழுகிறதா?

அப்படியானால் கோர்பசேவும் ரீகனும் உலக சமா தானம் என்ற கூடாரத்தில் நுழைந்துகொண்டு உலகைப் பங்கிடப் பேரம்பேசினார்கள் என்பது தானே உண்மை? மேலும் போவோம்,

படிப்பகம்

www.padippakam.com



''மூன்றாவது ஒரு நாடோ அல்லது பயங்கரவாதிகள் கோஷ்டியோ அனுகுண்டோ வெடித்து சோதனை செய்யுமானால், அதுகுறித்து யாருக்குத் தகவல் கிடைத்தாலும் உடனே அமெரிக்காவும் ரஷ்யாவும் தங்களிடையே உள்ள நேரடி டெலிபோன் தொடர்பு மூலம் கலந்து ஆலோசனை நடத்தும் என்று விசயமறிந்த வட்டாரத்தினர் கூறுகின்றனர்.

''இது தொடர்பாக ஜூன் 14 1985 அன்று ஜெனிவாவில் நடந்த இருதரப்பு அதிகாரிகள் கூட்டத்தில் உடன்பாடு ஏற்பட்டது.

''ஆயுதக் கட்டுப்பாடு ஒப்பந்தத்தைச் செயல் படுத்துவது குறித்து அமெரிக்க ருஷ்ய அதிகாரிகள் ஜெனிவாவில் அடிக்கடி கூடி விவாதிக்கின்றனர். நிரந்தர ஆலோசனை கமிசன் என்ற பெயரில் இக்குழு இயங்குகிறது''.

[தினமணி—18-7-85]

மாஸ்கோ வாசிங்டனின் கள்ளக்கூட்டு எப்படி இருக்கிறது பார்த்தீரா? இவர்கள் பயங்கரவாதிகள் என்று சொல்வது புரட்சிகர சக்திகளேயாகும். வேறு எந்த நாடுகள் அணுகுண்டு செய்தாலும் இவர்கள் கலந்து ஆலோசிப்பார்களாம்!

தங்களுடைய கட்டுப்பாட்டிலிருந்து எந்த நாடும் விலகிவிட முடியாத அளவிற்கு, எப்படித் தங்களுடைய நடவடிக்கைகளை அமைத்திருக்கிறார்கள் பாருங்கள். இதற்கு நிரந்தர ஆலோசனைக் கமிஷன் வேறு!

அடுத்து, மத்திய ஆசியப் பிராந்தியத்திலும் எங்கள் ருஷ்ய ஜார்கள்தான் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை

படிப்பகம்

www.padippakam.com



எதிர்த்துப் போராடி அந்த அரபு மக்களை வாழவைக்கிறார்கள் என்று போலிகள் பிரச்சாரம் செய்கின்றனர்.

உண்மை என்னவோ, இதற்கு மாறாக இரு ஏகாதிபத்தியங்களும் அந்த மக்கள் மத்தியில் அம்பலப்பட்டு நிற்பதாகத்தான் இருக்கிறது. அடுத்துவரும் தகவல் இதை ஊர்ஜிதம் செய்கிறது.

> ''பெய்ரூட் ஜூலை-22-1985-கோபன் ஹேகனில் இன்று அமெரிக்க விமானக் கம்பெனி ஆபீசையும் யூதஆலயத்தையும் தாங்கள் தான் குண்டு வைத்துத் தகர்த்ததாகவும், நேற்று தெற்கு லெபனான் கிராமம் ஒன்றில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களுக்குப் பதிலடி தரவே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் 'ஜூவாரத் இஸ்லாம்' என்ற ஸ்தாபனம் கூறியது.
>
> ''அமெரிக்க ஜனாதிபதி மாளிகையின் **வெள்ளை மாளிகையின்** மையப்பகுதிக்குள்ளும் ரஷ்யாவின் கிரெம்ளின் மாளிகைக்குள்ளும் பிரிட்டிஷ் பிரதமரின் மாளிகைக்குள்ளும் மற்றும் ஏகாதிபத்திய உலகில் வலம்வரும் எல்லா மேற்கத்திய அரபு தலைவர்களின் மாளிகைக்குள்ளும் நாங்கள் உட்புகுவோம் என்றும் எச்சரித்தது.
>
> [தினமணி—24-7-85]

இப்படி ஒரு வரவேற்பை வாசிங்டனுக்கும் மாஸ்கோவுக்கும் அளித்த 'ஜூவாரத்' அணியினர் மேலும் இவர்களை வாழ்த்தத் தொடங்கி விட்டார்கள். அதைக் கேட்போம்.

> ''பெய்ரூட் அக்—5—1985. U, S. (யு. எஸ்) தூதரக அதிகாரியான வில்லியம் பக்லியைத்

படிப்பகம்

www.padippakam.com



தாங்கள் கொன்றுள்ளதாக, இஸ்லாமிய ஜீவராத் நிறுவனம் அறிவிததுள்ள போதிலும் இக் கொலையை ஊர்ஜிதம் செய்ய முயலவில்லை.

''ரஷ்யத் தூதரகத்தைத் தங்களது தற்கொலைப் படையினர் தாக்கவிருப்பதாக இந்த நிறுவனம் மிரட்டல் விடுத்திருப்பதைத் தொடர்ந்து 75 ரஷ்யர்கள் பெய்ரூட்டிலிருந்து பலத்த காவலுடன் பஸ்சில் சிரியா சென்றனர்.''

[தினமணி—6-10-85]

என்ன போலிகளே! இப்படி அமெரிக்க ருஷ்ய ஏகாதிபத்தியங்களை ஒரே நேரத்தில் விரட்டியிருக்கும் இவர்களும் C I. ஏக்களா? தீவிர மதவெறியர்கள் மட்டுமே என்று திரித்துவிடலாம்! கவலைப் படாதீர்கள்.

இப்படி அரபு பிரதேசங்களில் அம்பலப்பட்டு நிற்கும் அமெரிக்க ரஷ்யப் பிணந்தின்னிக் கழுகுகளின் முகத்திரைகள் மேற்கத்திய நாடுகளிலும் கிழியத் தொடங்கி விட்டன. அக்டோபர் 26—1985 அன்று சுமார் 80,000 மக்கள் லண்டன் மாநகரில், 'மனித இனமா அல்லது ஆயுதக் குளமா?' என்ற கோசம் பொரித்த பேனர்களைக் கையில் பிடித்து அமெரிக்க ருஷ்யத் தூதரலாயங்களின் முன் கடந்து சென்று, தங்கள் எதிர்ப்பை இருவருக்கும் காட்டியதாக 28-10-85—தினமணி சொல்கிறது.

இப்படி மக்கள் இவர்களை எதிர்ப்பதையெல்லாம் பற்றி இந்த இரு பாசிஸ்டுகளும் கவலை கொள்ளவில்லை. மாறாக அவ்வப்பொழுது ரகசிய ராத்திரிகளை நடத்திக் கொண்டு தான் இருக்கிறார்கள். 'தினமணி' 5-11-85 பின் வருமாறு எழுதுகிறது :

''லண்டன் நகரம்—3—1985-18 வருட இடைவெளிக்குப்பின் இஸ்ரேலுடன் மீண்டும் ராஜிய

படிப்பகம்

www.padippakam.com



உறவுகளை ரஷ்யா ஏற்படுத்திக் கொள்ளப் போகிறது என்று பிரபல லண்டன் பத்திரிக்கைகளான 'அப்சர்வரும்' 'சண்டே டைம்சும்' இன்று தெரிவித்துள்ளன.

''ரஷ்யாவுக்கும் இஸ்ரேலுக்குமிடையே ராஜிய உறவை மீண்டும் ஏற்படுத்த ரகசியப் பேச்சு நடைபெற்று வருகிறது. இப் பேச்சுக்குப் பின் ஆயிரக்கணக்கான யூதர்கள் இஸ்ரேலில் குடிபுகுவார்கள் என்று 'சண்டே டைம்ஸ்' பத்திரிக்கை கூறுகிறது.

''மாஸ்கோவுடனும் குறைந்த பட்சம் இரண்டு கிழக்கு அய்ரோப்பிய நாடுகளுடனும் (போலந்து' ஹங்கேரி) ராஜிய உறவு ஏற்படும் என மூத்த இஸ்ரேலிய அதிகாரிகள் கருதுவதாக 'அப்சர்வர், பத்திரிக்கை தெரிவிக்கிறது.

''இரண்டு இஸ்ரேலிய அதிகாரிகளின் குழுக்கள் மாஸ்கோ சென்றிருப்பதாக 'சண்டேடைம்ஸ்' கூறுகிறது''

[தினமணி—5. 11. 85]

இதேபோல் அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்யக் கோர்பசேவ் குழைவைத் தினமணி (12. 12. 85) வெளிப்படுத்துகிறது. இதையெல்லாம் பார்க்கத்தான் மேற்கு வங்கப் புரட்டல்வாதிகள் பன்னாட்டுக் கம்பெனிகளுக்குப் படுக்கை விரித்துப் பார்த்து நிற்கிறார்கள் போலும்? அடுத்து அமெரிக்காவின் பெப்ஸி கோலா கம்பெனிக்கு ரஷ்யாவில் 16 ஆலைகள் உள்ளதாக 16. 1. 86 தினமணி சொல்கிறது.

இந்திய உழைக்கும் மக்களின் இரத்தம் குடிப்பதற்காகவே அவதரித்திருக்கும் சிவப்புச் சாயங்களே!

படிப்பகம்

www.padippakam.com



கோர்பசேவ் கூட்டம் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுகின்ற இந்த லட்சணத்தை அப்பாவித் தோழர் களிடம் நீங்கள் அறிவித்தது உண்டா?

மேலே போவோம்.

சர்வதேச அளவில் கம்யூனிசப் புரட்சிகளை ஒடுக்கு வதில் அமெரிக்க ஏகாதிபத்தியமும் ருஷ்ய ஏகாதிபத் தியமும் கள்ளக்கூட்டு வைத்துக்கொள்கின்றன என்று தன் நாட்டில் ஒரு மாபெரும் புரட்சியை நடத்திக்கொண் டிருக்கும் 'பெரு'வின் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரித்ததை 'சமரன்' வெளியிட்டது.

அது சூடானின் விவகாரத்தில் உண்மைதான் என்று அம்பலப்பட்டுப் போனது. அதைப் பார்ப்போம்.

'சூடான் ஆப்ரிக்காவில் மையப்பகுதியில் உள்ள ஒரு பெரிய நாடு. மாஸ்கோவால் ஆதரிக்கப்படும் எத்தியோப் பியாவும் கடாபியின் லிபியாவும் மற்றும் எகிப்தும் சூடானின் அண்டை நாடுகளில் அடங்கும்.

1969-ல் ஒரு அரண்மனைப் புரட்சி மூலம் ஜாபர் நிமீரி என்ற அமெரிக்க அடிவருடி அதிகாரத்தைக் கைப் பற்றினான். கடந்த 1985 ஏப்பிரலில் இவன் அமெரிக்கா சென்றிருந்தபோது போலிச் சிவப்புகளால் 'இடது சாரி' என்று பிரச்சாரம் செய்யப்பட்ட "ஸ்வர்-அல்த-ஹாப்" என்ற பாசிஸ்ட் அரண்மனைப் புரட்சி மூலம் நிமீரியின் நாற்காலியைப் பற்றிவிட்டான்.

நிமீரியின் ஆட்சிக்காலத்தில் அமெரிக்க ஏகாதிபத் தியத்தின் கோரக் கொள்ளையினால் சூடான் சுடுகாடாகிப் போனது. விளைவு சூடான் 'மக்கள் விடுதலைப்படை' என்ற அமைப்பு பிறந்தது. புரட்சிப் போராட்டங்கள் உக்கிரமடைந்தன. ருஷ்யக் கரடிகள்

படிப்பகம்

www.padippakam.com



சும்மா இருக்குமா! அமெரிக்க அடிவருடி நிமீரியை விரட்ட அருமையான சந்தர்ப்பமாயிற்றே!

சோஷலிசச் சொர்க்கபுரியான எத்தியோப்பியாவும் உலக விடுதலை இயக்கங்களைச் சீர்குலைக்க மாஸ்கோ மன்னர்களுக்கு மந்திரியாக இருக்கும் லிபியாவின் காட்டு மிராண்டி கடாபியும் சூடானிய மக்கள் விடுதலைப்படை யிடம் ஆயுதங்களை அள்ளி வீசினார்கள், ஆதரவா யிருப்பது போல நடித்தார்கள்.

ஆகா எப்பேர்பட்ட ஆதரவு பாருங்கள். இனிமேல் தான் கதையே. மாஸ்கோவின் இந்தச் செயல்களைத்தான் இந்தியப் பன்றிகள் ஆகா எங்கள் சோசலிச ஏவுகணைகள் உலகத்தின் விடுதலைக்காகத் தயாரிக்கப்பட்டவைகள், அதைத்தான் எங்கள் அரசர்கள் செய்துகொண்டிருக் கிறார்கள் என்று உருமிக் கொண்டிருக்கிறார்கள்.

விளைவு, மாஸ்கோவையும் கடாபியையும் எதியோப் பியாவையும் எதிர்த்து வந்த நிமீரி தூக்கியெறிப்பட்டான். ஸ்வர்-அல்-தஹாப் அதிகாரத்தைப் பிடித்தான். இவன் மாஸ்கோவிற்கு ஆதரவு காட்டத் தொடங்கினான், கடாபியையும் காதலித்தான். அவ்வளவுதான்.

உடனே நம் போலி சிவப்புகள் அவன் கையில் பிடித் திருக்கும் துப்பாக்கியின் பேனட்டில் சோஷலிச முத்திரை யைக் குத்திவிட்டார்கள். இப்போது எல்லோரும் கூடிக் குலாவிக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ சூடானின் மக்கள் படை, லிபியா, எதியோபியா உதவி என்றெல்லாம் கேள்விப்பட்டோமே அவையெல்லாம் என்னவாயிற்று என்று கேட்கிறீர்களா? இனி அவர்களெல்லாம் CIAக்கள் தான். என்ன போலிகளே, சந்தோசம் தானே!

படிப்பகம்

www.padippakam.com



சூடானிய மக்கள் படைக்கு உதவி அளிப்பதை நிறுத்திக் கொள்வதாக அறிவித்துவிட்டு ஸ்வர்-அல்-தஹாப்பைக் கட்டித் தழுவ சூடானுக்குப் போய் வந்துவிட்டான் கடாபி. சூடானிய மன்னனோ எத்தியோப்பியாவுடன் உறவுகொள்ள அறிவிப்புச் செய்துவிட்டான். இனி எஞ்சியிருப்பது ஆப்கான், கம்பூசியாவை போல சோசலிச பிரச்சாரம் செய்யவேண்டும் என்பதுதான்.

எல்லாவற்றையும் விட கொடுமை என்ன தெரியுமா? சூடானின் மக்கள் படையானது அமெரிக்க ஆதரவு நிமீரியாவாலும் தாக்கப்பட்டது. இன்றைய தினம் மாஸ்கோ மன்னர்களின் எடுபிடிகளான லிபியா, எதியோப்பியாவின் ஏமாற்றுகளுக்கு பலியாகி ராணுவ சர்வாதிகாரி ஸ்வர்-அல்-தகாப்பினாலும் தாக்குதலுக்குள்ளாகிறது!

செப்டம்பர் 8-1985 அன்று மட்டும் சுமார் 400 புரட்சிப் போராளிகள் ராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டதாக 10-12-85 தினமணி தெரிவிக்கிறது. இதனால் போராளிகள் களைத்துவிடவில்லை. மாறாக, மேலும் தாக்குதலைத் தீவிரப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் செய்தி கூறுகிறது.

எனவேதான் பாசிச கடாபியும் எதியோப்பியாவும் ருஷ்யா ராணுவச் சக்கரத்தில் கட்டுண்டு கிடக்கும் சிரியாவும் மாஸ்கோவின் ஏவலர்களாக சர்வதேச அளவில் புரட்சிகர அமைப்புகளைச் சீர்குலைக்கிற, ஏமாற்றுகிற, ஒழித்துக் கட்டுகிற அமெரிக்க ஏகாதிபத்தியத்தனத்தை அப்படியே அடிபிசகாமல் அரிவாள் சுத்தியல் பொறித்த சிகப்புப் போர்வையைப் போர்த்திக் கொண்டு செல்வதால்தான்,

படிப்பகம்

www.padippakam.com



நாம் மாஸ்கோவையும் வாசிங்டனையும் எதிர்ப் புரட்சியில் அணிவகுத்து நிற்கும் பாசிச வெறிநாய்கள் என்று அம்பலப்படுத்த வேண்டியிருக்கிறது.

[ஆதாரம்-12/15.6. 85—தினமணி]

இவ்வளவு நேரமும் பொறுமையாகப் பார்த்த அன்பிற்கும் நேசத்திற்கும் உரிய எமதருமைத் தோழர்களே, இதுவரை இச்சிறு வெளியீட்டில், தொடக்கமுதல் இறுதிவரை நாம் பார்த்த அனைத்து விசயங்களையும் தொகுத்துப் பார்க்கும் போது,

தோழர் ஸ்டாலின் மறைவிற்குப் பிறகு ருஷ்யாவை ஆண்டுவரும் ஆட்சியாளர்கள், பிரச்சாரத்தில் மட்டுமே சோஷலிஷ்டுகளாகவும் நடைமுறையில் ஏகாதிபத்திய வாதிகளாகவும் இருந்து வந்திருக்கிறார்கள் என்பதானது வெளிப்படையாகத் தெரிகிறது.

இப்படிப்பட்டவர்களை,ஏகாதிபத்தியம் முதலாளியத்தின் உச்சக் கட்டம் எனும் நூலில் பேராசான் லெனின் 'சமூக ஏகாதிபத்தியவாதிகள்' என்று அறிவிக்கிறார்.

எனவே லெனினிய வாதிகளான நாம் மாஸ்கோவின் ஆட்சியாளர்களைச் 'சமூக ஏகாதிபத்திய வாதிகள்' என்று அம்பலப்படுத்துகிறோம். சர்வதேசப் பாட்டாளிவர்க்கத்தின் நலனுக்காகவும் இந்தியாவிலும் பிற நாடுகளிலும் உள்ள உழைக்கும் மக்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் ஏழைகள் ஆகியோரின் நலனுக்காகவும், அவசியத்தின் அடிப்படையில் சொல்லில் சோசலிஷ்டாகவும் செயலில் ஏகாதிபத்திய வாதிகளாகவும் இருக்கும் ருஷ்யாவின் ஆட்சியாளர்களை நாம் அம்பலப்படுத்த வேண்டிருக்கிறது. அதைச் செய்கிறோம். செய்வோம்!

★ புதிய சனநாயகப் புரட்சிக்காக ருஷ்ய ஜார்களை அம்பலப்படுத்துவோம்!



படிப்பகம்

www.padippakam.com



★ ருஷ்ய ஜார்களை அப்புறப் படுத்துவோம்!

★ ஜார்களின் எடுபிடிகளான போலிச் சிவப்புகளை மக்கள் மத்தியில் துகிலுரிப்போம்!

★ போலிச் சிவப்புகளை அப்புறப்படுத்துவோம்!

★ ருஷ்யப் பாட்டாளிகளின் உற்ற தோழர்களாய் இருப்போம்! சீனமக்களுக்குத் தோள் கொடுப்போம்!

★ திரிபு வாத டெங் கும்பலை ஒழிப்போம்!

★ மார்க்சிய லெனினிய மாவோயிச வாளேந்திச் சமர் புரிவோம்! வெற்றியடைவோம்!!

★ புதிய சனநாயகப் புரட்சி ஓங்குக!
உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்!!

படிப்பகம்